# ஜாதியை ஒழிக்கவே இடஒதுக்கீடு



தந்தை பெரியார்

கி.வீரமணி

# ஜாதியை ஒழிக்கவே - இடஒதுக்கீடு

## (வகுப்புவாரி பிரதிநிதித்துவம்)


▪ தந்தை பெரியார்

▪ கி.வீரமணி



**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,

வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | ஜாதியை ஒழிக்கவே - இடஒதுக்கீடு<br>(வகுப்புவாரி பிரதிநிதித்துவம்) |
| ஆசிரியர் | : | தந்தை பெரியார், கி.வீரமணி |
| பொருள் | : | சமூகநீதி |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : ஜுன், 2016<br>இரண்டாம் பதிப்பு : 2019 |
| பக்கங்கள் | : | 80 |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ.50/- |
| வெளியீடு மற்றும்<br>உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>www.dravidianbookhouse.com |

# பொருளடக்கம்

**பகுதி 1**


1. மதத்தையும் ஜாதியையும் விட்டுவிட்டவர்கள் உண்டா? - தந்தை பெரியார் 5
2. நம்நாட்டுப் பார்ப்பனர் யோக்கியர்களாகவோ அல்லது அறிவாளிகளாகவோ இருக்க முடியுமா? - தந்தை பெரியார் 9
3. ஜாதியை ஒழிக்கவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் - தந்தை பெரியார் 16


**பகுதி 2**


4. இட ஒதுக்கீடு : தந்தை பெரியாரின் கருத்து முத்துகள் 19


**பகுதி 3**

**இடஒதுக்கீடு கேள்விகளுக்கு கி.வீரமணி பதில்கள்**


1. மண்டல் குழுவின் முக்கிய பரிந்துரைகள் என்ன? 48
2. ‘கிரீமிலேயர்’ என்ற பொருளாதார அளவுகோலை ஏன் வலுக்கட்டாயமாக, அரசமைப்புச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாகப் புகுத்த வேண்டும்? 50
3. இடஒதுக்கீட்டு விஷயத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் பொறுத்தவரை அதற்கான சலுகைகள் மூலம் முன்னேறியவர்களை ‘கிரீமிலேயர்’ என்று ஒதுக்கி விடுகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் அப்படி முன்னேறி உயர் பதவிகளை அடைந்தவர்களை கிரீமிலேயர் என்று ஒதுக்குவதில்லை. இதனால் அந்தப் பிரிவில் உள்ள ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மீண்டும் முன்னேறிய குடும்பத்திற்கே கிடைப்பது என்ன நியாயம்? 52
4. இட ஒதுக்கீட்டிற்கு ஒரு சட்டப்பூர்வமான பாதுகாப்பு கிடைத்து விட்டது. ஆனால், இடஒதுக்கீட்டின் பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா? 54
5. இட ஒதுக்கீடு இத்தனை சதவிகிதம்தான் இருக்கவேண்டும் என்று நீதிமன்றங்கள் நிர்ணயிக்கலாமா? அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறதா? 55
6. இடஒதுக்கீடு தற்காலிகமானது என்றுதான் அரசியல் சட்டம் கூறுகிறது. எந்தக் காலக் கட்டத்தில் அது முடிவுக்கு வரும்? 56
7. பொருளாதார அடிப்படையில் தமிழகத்தில் கல்வி, வேலை வாய்ப்புகளுக்கு இட ஒதுக்கீடு செய்வதைத் தங்களது கழகம் ஏற்க மறுப்பது ஏன்? 57
8. கல்வியில் சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்னிலையில் இருப்பவர்கள் இட ஒதுக்கீடு தருவது நியாயம் என்றாலும், வேலை வாய்ப்பு என்று வரும்போது பொருளாதார அளவுகோலே இருக்க வேண்டும் என்பது சரியா? 59

9. ஜெயலலிதா, எந்தச் சமூகநீதியைக் காப்பாற்றியதற்காக அவருக்கு சமூகநீதி காத்த வீராங்கனை பட்டம் கொடுத்தீர்கள்? 60

10. முன்பு கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு மறுக்கப் பட்டதற்கு ஜாதி ஒரு காரணமாக இருந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக 30, 40 ஆண்டுகளாக இப்படி மறுக்கப்படுவதற்குப் பொருளாதாரமும் ஒரு காரணமாக இருக்கிறது. ஒருவர் ஏழையாக இருப்பதால் அவனுக்குக் கல்வி கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதனால், அவன் வளர்ச்சி பெறமுடியாத சூழல் இருக்கிறது. எனவே, எப்படி ஜாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு தேவைப்படுகிறதோ, அதே மாதிரி பொருளாதார அடிப்படையிலும், இட ஒதுக்கீடு தேவை என்பதற்கான நியாயங்கள் இருக்கிறதல்லவா? 61

11. பிற்படுத்தப்பட்டோருக்கு - கல்வி வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு செய்வதைவிட - பொருளாதார நலத் திட்டங்களை அமல்படுத்துவதே அவர்களை முன்னேறச் செய்யும் என்ற வாதம் சரியா? 63

12. கல்வியறிவு, பொருளாதார நிலை உயர, உயர ஜாதி பாகுபாடு குறைகிறது என்பதை ஒப்புக் கொள்வீர்களா? 64

13. ஜாதியே கூடாது என்கிறீர்கள். ஆனால் ஜாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு வேண்டும் என்று ஏன் கூறுகிறீர்கள்? 65

14. ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறுவோர் - ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்கலாமா? 66

15. இட ஒதுக்கீட்டினால் ‘தகுதி - திறமை’ போய்விடுகிறது என்பது சரியா? 67

16. பிற்படுத்தப்பட்டோரிலேயே - ஒரு குறிப்பிட்ட பிரிவினரே இடஒதுக்கீட்டின் முழு பயனையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சரியா? 68

17. வேலையில் சேருவதற்கு இட ஒதுக்கீடு கேட்பது சரி; பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு கோருவது சரியா? 70

18. மூன்று தலைமுறைக்கு மேல் படித்த குடும்பங்களுக்கு இட ஒதுக்கீடு சலுகை தொடர்ந்து தரப்பட வேண்டுமா? 71

19. தமிழ்நாட்டில் சமூகநீதிக்கு எதிரான நுழைவுத்தேர்வு நுழையும் ஆபத்து உள்ளதா? 72

20. அர்ச்சகர் பிரச்சினையில் பார்ப்பனர் அணுகு முறைக்கும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அவர்களின் அணுகுமுறைக்கும் உள்ள வேறுபாடு என்ன? 78

21. ஜாதியை ஒழிக்கவே முடியாதா? 79

22. ஜாதி ஒழிப்புதான் உங்கள் இலக்கு என்கிறீர்கள். அப்படி ஜாதி ஒழிக்கப்பட்டு விட்டால் இடஒதுக்கீடும் போய் விடுமே... உடன்பாடா உங்களுக்கு? 80

# மதத்தையும் ஜாதியையும் விட்டுவிட்டவர்கள் உண்டா?

இந்தியர்களின் அடிமைத் தன்மைக்கும் இழி நிலைக்கும் மதமும், ஜாதியும், வகுப்பும், அவை சம்பந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும், சடங்குகளும், இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கை கொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும் என்பதாக நாம் பலதடவை சொல்லி வந்திருக்கின்றோம். பலமாக அநேக உதாரணங்களுடன் எழுதியும் வந்திருக்கின்றோம்.

மதங்களின் பேரால், பல முக்கிய மதங்களும், அநேக கிளை மதங்களும் உட்பிரிவு மதங்களும் ஏற்பட்டு, மக்களை பெரும் பெரும் பிரிவுகளாகப் பிரித்துவிட்டதென்றாலும் வருணாசிரமத்தையும், ஜாதிப் பிரிவுகளையும், பல வகுப்புப் பிரிவுகளையும் கொண்டதான இந்து மதமானது, எல்லா மதங்களையும் விட மக்கள் சமுகத்திற்குப் பெரிய இடையூறாய் இருந்து கொண்டு, மக்களின் ஒற்றுமையையும், தன்னம்பிக்கையையும் அடியோடு பாழாக்கி வருவதுடன் இதன் காரணமாய் மக்கள் வலு இழந்து, சுயமரியாதை இழந்து, சுதந்திரமற்று நடைப்பிணங்களாகவும், பகுத்தறிவற்ற மிருகத்தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதற்கு உதாரணமாக, சென்னை மாகாணத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு பார்த்தாலே போதும், இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஜனங்கள் சுமார் மூன்றே முக்கால் கோடி மக்கள் இருக்கின்றார்கள் என்றாலும் அவர்கள் 385 ஜாதிகளாகவும் மற்றும் பல உள் பிரிவு ஜாதிகளாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றார்கள் (இந்த ஜாதி பெயர்களும் ஒவ்வொரு ஜாதியாரின் எண்ணிக்கையையும் காலம் சென்ற எல்.டி சாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் பிரசுரித்த 'மெட்ரா இயர்புக்' என்னும் புத்தகத்தில் காணலாம். நாளேற நாளேற நாகரிகத்தின்

காரணமாகவும், செல்வ நிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான ஜாதிப் பிரிவுகளும், உட்பிரிவுகளும் ஏற்படும்படியான நிலையிலேயே தேசம் போய்க் கொண்டிருக்கின்றதே தவிர, அவைகள் குறைந்து ஒன்றுபடத்தக்க முயற்சியோ, அறிகுறியோ காண்பதற்கில்லை.

இந்தியாவின் 8-இல் ஒருபாகம் கொண்ட சென்னை மாகாணத்தில் மாத்திரம் 385 ஜாதிப் பிரிவுகள் இருக்கின்றதென்றால், இனி மற்ற 7 பாக ஜனத் தொகையில் எத்தனை ஜாதிப் பிரிவுகள், எத்தனை உட்பிரிவுகள் இருக்கக்கூடும் என்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப்பார்த்தால் தானாக விளங்கிவிடும்.

இந்த ஜாதிப் பிரிவுகள் மாத்திரமல்லாமல், “உயிரினும் தேசத்தினும் முக்கியமாய் கருத வேண்டிய”தான தாய் பாஷைப் பிரிவுகள் எவ்வளவு? இவ்வளவு ஜாதியும், தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிவுபட்டு இருக்கின்றோம் என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு! தாழ்வு என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற உள் எண்ணமும் வெளி நடவடிக்கைகளும் வெறுப்பும் துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும், யாரோ சில சோம்பேறிகளும் சுயநலக்காரர்களும் “தேசியம் தேசியம்” என்று சொல்லி மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால், நாடு எப்படி சேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம்தான் தேசிய வயிற்றுப்பிழைப்பு வியாபாரம் நடத்த முடியுமே ஒழிய, இது என்றும் நிலைத்திருக்க முடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

“வகுப்புவாதம் கூடாது” என்று சொல்லுவதன் மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வகையற்ற தேசியவாதிகளையும், உத்தியோகம், பதவிப் பிரியர்களையும் மிரட்டலாமே ஒழிய, வகுப்புப் பிரிவுகளாலும், உயர்வு தாழ்வு வித்தியாசங்களாலும், உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

“வகுப்புவாதம், மதவாதம், ஜாதிவாதம் பேசி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப்போகின்றது” என்று திப்பிலி, தேசாவரம், சதகுப்பைகளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டதைக் கண்டு நாம் சிறிதும் லட்சியம் செய்யவில்லை.

அந்தப்படி எழுதும், பேசும் யோக்கியர்களில் 100-க்கு அரைப்பேராவது தங்கள் மதத்தையும், உள்மதத்தையும், ஜாதியையும், உள் ஜாதியையும், வகுப்பையும், உள் வகுப்பையும் விட்டு விட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

ஆகவே, தேசியம் என்பதும், தேசியப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும், இழிதகைமை உள்ளவர்களாகவும் செய்து விடுகின்றது என்பது கவனித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று தனி மதம், தனி ஜாதி, தனி வகுப்பு என்பதாகப், பிரிக்கப்பட்ட பின்பு, அவன் தனது மதம், தனது ஜாதி, தனது வகுப்புக்கு என்று ஒரு உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ, அயோக்கியத்தனமோ இருக்கமுடியும்?

**வகுப்புவாதம், மதவாதம், ஜாதிவாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கின்றார்களா?** அது மாத்திரமல்லாமல் பார்ப்பனர் முதல் பறையர் வரை, மாயாவாதம் முதல் சைவர் வரை அவரவர்களின் ஜாதி, மத வகுப்புக்கு உயிரை விட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கின்றார்களேயொழிய, ஒருவராவது ஜாதி, மத வகுப்புக்களைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா? மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் ஒருபுறத்தில் காப்பாற்றிக் கொண்டு, மற்றொருபுறத்தில் ஜாதி மத வகுப்புப் பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம், இழி தன்மை என்று சொன்னால் அப்படிச் சொல்லுவது ஆயிரம் மடங்கு அயோக்கியத் தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத்தன்மையும், துரோகத்தன்மையும் ஆகாதா என்பதோடு, இது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ்மக்கள் தன்மையா ?அல்லவா? என்று கேட்கின்றோம்!.

தேசம் ஜீவராசிகளுக்குப் பொதுவானதாகும். தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும். எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தை தெரிவிக்கவும், ஆட்சியில் பங்குபெறவும் உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்க முடியாததாகும். ஏதோ சில அயோக்கிய வஞ்சகக்காரர்களது செல்வாக்குக் காலத்தில் அவர்களது

ஏய்ப்பில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுங்கீனமுள்ள அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமங்களாலும், கொடுங்கோன்மைகளாலும் ஜாதி, மத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு, ஒரு ஜாதி மத வகுப்பை மற்றொரு ஜாதி மத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு ஜாதி மத வகுப்பு உழைப்பில், மற்றொரு ஜாதி மத வகுப்பு சோம்பேறியாய் இருந்து கொண்டு, உண்டு வாழும் படியாயும் செய்யப்பட்டு விட்டதினாலேயே எல்லா காலங்களிலும், எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு உதவியாகவே இருக்கவேண்டுமா என்றும், யாரோ சிலருக்குப் பிழைப்பதற்கு வேறு வழி இல்லாததினாலேயே, அந்த ஈனர்களுக்கு கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடையவேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

ஏதாவது ஒரு மனிதன் "என்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், என்னுடைய ஜாதி வலியிழந்த ஜாதியென்றும், என்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டு இழிவுபடுத்தப்பட்டது என்றும் சொல்லி, அதன் காரணமாக ஆட்சியில் எனக்குள்ள பங்கு இன்னது என்பதைத் தெளிவாய்ச் சொல்லி, என்னை நீ அடக்கி ஆள முடியாதபடி செய்துவிடு" என்று சொல்வதில் என்ன தப்பு இருக்கின்றது என்று கேட்கின்றோம்? இதற்குப் பதில் சொல்லாமல் அப்படிக் கேட்பது "குலாம் தன்மை" என்றும் தேசத்துரோகத்தனம் என்றும் சொல்லுவதானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை இப்படிச் சொல்லுவது "வயிற்றுப் பிழைப்புக்கு எச்சிலை பொறுக்கும் இழிதன்மை" என்று ஏன் சொல்லக் கூடாது. தன் பங்கை தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் அநேகமாய் நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே எந்த மதக்காரருடைய பங்கையானாலும், எந்த ஜாதி வகுப்புக்காரருடைய பங்கையானாலும் மறுத்து ஏமாற்றப் பார்த்தால், கண்டிப்பாக அந்த நாடு கேடுறுவது திண்ணம். எப்படிக் கேடுற்றாலும், சில பொறுப்பற்ற கூலிகளின் ஜீவனம் நடந்தேறலாம் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆனால், நாடு கெடும் என்பதை உண்மையும் பொறுப்பும் உள்ள மக்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.......

**தலையங்கம்**
"குடி அரசு" 8.11.1931

# நம்நாட்டுப் பார்ப்பனர் யோக்கியர்களாகவோ அல்லது அறிவாளிகளாகவோ இருக்க முடியுமா?

நம்நாட்டு பார்ப்பனர் அறிவிலிகளா? அல்லது பேராசைப் பிடித்த அயோக்கியர்களா? என்பது நம் மக்களுக்கு விளங்கவில்லை.

இன்றைய நம் நாட்டு அரசியல், இந்தப் பார்ப்பனர்களின் தொல்லையாலும், நேர்மைக்கேடான கலவரத்தாலும், வகுப்புக் கலவரத்தையும், வகுப்பு ஆதிக்கத்தையுமே அடிப்படையாகக் கொண்டதாக ஆகிவிட்டதுடன், இந்த நிலை வெகு சீக்கிரத்தில் பலாத்காரத்தைக் கிளப்பிவிட்டு, அராஜகத்திற்கு வழி கோலுவதற்கேதுவாகவே இருந்தும், வளர்ந்தும் வருகிறது. இதற்கேற்பவே இந்நாட்டில் சங்கராச்சாரியர்கள், வெறும் ஆச்சாரியர்கள், அய்யர்கள் - அய்யங்கார்கள், அய்யர்களின் - அய்யங்கார்களின் பத்திரிகைகள் ஆகியவர்கள் கட்டுப்பாடாக இதே தொண்டை, தங்கள் வேத தர்மமாகக் கொண்டு செய்து வருகின்றனர்.

வகுப்பு உரிமை, கேட்பதையும் வகுப்பு நியாயம் வழங்குவதையும் பஞ்சமாபாதகமாகக் கருதி வெறிக் கூச்சல் போட்டு, தமிழ் மக்களுக்கு (உண்மை திராவிடர்களுக்கு) ஆத்திரத்தையும் உயிருக்குத் துணியும்படியான அளவு மான உணர்ச்சியையும் ஊட்டி வருகிறார்கள்.

எலெக்ஷன் நெருங்க நெருங்க, பார்ப்பனர்களும் - பார்ப்பனப் பத்திரிகைகளும் பேயாட்டம் ஆடத் துணிந்து விட்டனர். இருக்கும் நிலைமை தேர்தலுக்குள் இரு தரப்பிலும் (ஆரியர் - தமிழர்களுள்) பல இல்லாவிட்டாலும் சில கொலைகளாவது விழுந்து தீரும் என்றே பயப்பட வேண்டிய நிலை காணப்படுகிறது. பார்ப்பனர்கள் எந்த அளவுக்கு வெறியாட்டம் ஆடினாலும் இன்று இந்த நாட்டில் என்னை ஒருவனைத் தவிர கேள்வி கேட்பாட்டிற்கே இடமில்லாமல் இருப்பதால் அவர்கள் கண்களுக்கு நான் ஒருவனே எதிரியாய் காணப்படுகிறேன்.

ஆனால் மற்றவர்கள் வாயைத் திறந்தாலே, பார்ப்பனர்கள் இடி முழக்கக் கூச்சல் போட்டு, அவர்களை (மற்றவர்களை) அடக்கப் பாடுபட்டு அடக்கி விடுகிறார்கள்.

பார்ப்பனர்கள், ‘மனு’ கொள்கைப்படி தங்கள் சுகவாழ்வுக்கும், ஆதிக்கத்திற்கும் ஒரு சிறு கேடும் இல்லாமல், என்ன காரியம் செய்தாவது பாதுகாத்துக் கொள்ளவும், மற்றவர்களான தமிழர்களை தலையெடுக்க முடியாமல் அழுத்தவும், அவர்கள் (பார்ப்பனர்கள்) பயன்படுத்தும் ஆயுதம் (வஜ்ஜிராயுதம்) “வகுப்புவாதம்” என்று கூறி நம்மீது எய்யும் ஆயுதமே ஆகும். இதை யார்மீதும், நமது எந்தப் பிரச்சினை மீதும் எய்துவிடுகிறார்கள். இந்த ஆயுதத்திற்கு என்னைத் தவிர, இந்நாட்டிலுள்ள எல்லோருமே பயப்படுகிறார்கள். இந்த ஆயுதம் என்னைத் தவிர வேறு எவன்மீது பட்டாலும் அவனைக் கொன்றுவிடுகிறது அல்லது மூர்ச்சை (சரணாகதி) அடையச் செய்துவிடுகிறது. “வகுப்புவாதி”களை ஒழிப்பதும் ‘வகுப்புவாதியாய்’ இல்லாதவனை ஆதரிப்பதும் தூக்கிவிடுவதும் பார்ப்பான் தனது தர்மமாகக் கொண்டிருப்பதால், வாழவேண்டிய தமிழன் எல்லோரும் (அதாவது தன்னை தமிழன் என்று சொல்லிக்கொள்ளும் எல்லாத் தமிழனுமே) அந்த ஆயுதத்திற்கு நடுங்குகிறான்!

இதனாலேயே பார்ப்பான் இன்று இவ்வளவு உச்ச நிலைக்கு ஏறிவிட்டான். இந்த நாட்டையும் பார்ப்பானையும் எடுத்துக்கொண்டால் இந்த நாட்டைப்பற்றி ஒரு முஸ்லீமுக்கு உள்ள உரிமையைவிட, ஒரு கிருஸ்தவனுக்கு உள்ள உரிமையைவிட ஒரு கடுகளவு உரிமையாவது அவனுக்கு (பார்ப்பானுக்கு) அதிகமுண்டு என்று யாராலாவது சொல்ல முடியுமா? என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றேன்.

முஸ்லீம் 100-க்கு 5 பேர் இருப்பான். கிருஸ்தவன் 100க்கு 3 பேர் இருப்பான். பார்ப்பான் 100க்கு இரண்டே முக்கால் பேர் இருப்பான். இதில் முஸ்லீமும் கிருஸ்தவர்களும் பரம்பரை தலைமுறைத் தத்துவத்தில் இந்த நாட்டு மக்கள். பார்ப்பான் அந்நிய நாட்டுப் பரம்பரை மகன் என்பதை வலியுறுத்திக் கூறுவேன். முஸ்லீமும், கிருஸ்தவர்களும் இந்த நாட்டு தமிழ்மகனை - அறிவிலும் ஆற்றலிலும் தகுதியிலும் திறமையிலும் தங்களுக்கு சரிசமமாகக் கருதி சம மரியாதையாய் நடத்துகிறவர்கள் ஆவார்கள்.

ஆனால் இந்த 100க்கு இரண்டே முக்கால் வீதம் உள்ள பார்ப்பனன் மற்ற 97¼, (தொண்ணூற்று ஏழேகால்) விகிதம் அதிகம் உள்ள

மக்களாகிய நம்மை எப்படி நடத்துகிறான் என்பதைப் பற்றி இந்த நாட்டுத் தமிழன் மான உணர்ச்சிக்கண்கொண்டு பார்க்காத ஒரே ஈனத்தன்மையால், ஈனப் பிறவியாகவேக் கருதி, தகுதி - திறமையில், பிறவியில் தன்னைவிடக் கீழான இழிமகன் என்றே கருதுகிறான்; கருதுவதோடு அல்லாமல், தனக்கு இப்படிக் கருதும், நடத்தும் இந்த நிலை உரிமை என்றே கருதி, அந்த இழிவை நம் தலையில் துணிவோடு சுமத்தி, தன்நிலையை உயர்த்திக் கொண்டு இருக்கிறான். அதற்கேற்ற கடவுள், மதம், சமுதாய அமைப்பு, அரசியல் ஆகியவற்றில் ஆதிக்கம் ஆகியவைகளையும் உண்டு பண்ணிக்கொண்டு, தைரியமாய் இந்நாட்டில் இந்த 1961லும் உலவுகிறான்.

இதற்குத் தமிழன் இடம் கொடுத்தக் காரணமே எதற்கெடுத்தாலும் தமிழனை, பார்ப்பான் 'வகுப்பு வாதி' பிற்போக்காளன் என்கிறான். "அரசியலில் தமிழன் (நாம்) எந்தப் பதவிக்கு ஆசைப்பட்டாலும் அதற்கு ஏற்ற தகுதி, திறமை உனக்கு இல்லை" என்கிறான்.

**நாம் வகுப்பு உரிமை கேட்கிறோமா? வகுப்புவாதம் செய்கிறோமா? நமக்கு உள்ள உரிமையைத்தானே கேட்கிறோம்?** இதற்கு ஆக பார்ப்பான் நம்மை வகுப்புவாதி என்கிறான் என்றால் இப்படி நம்மை இவன் சொல்லுவதாலேயே இவன் (பார்ப்பான்) வேறு வகுப்பு, நாம் வேறு வகுப்பு என்பதை அவனே ஒப்புக் கொண்டவனாகிறானா இல்லையா? இந்த நிலையில் வகுப்பு உரிமை (நீதி) கேட்பதை "வகுப்பு வாதம்" என்றே சொல்வதானாலும் அது எப்படி தவறாகும்? **"வகுப்பு வாதம்" பேசுவதாகக் கருதப்படுகிறவன் தனது ஜாதியைச் சொல்லி ஜாதி எண்ணிக்கைக்கு ஏற்ப 100க்கு 97 வீதம்தான் பதவி, உத்தியோகம் ஆகியவைகளில் ஜாதி உரிமை, ஜாதி நீதி கேட்கிறான் என்பதோடு, சிறுபான்மையோனான பார்ப்பானுக்கும் 100க்கு 3க்கு குறையாமல் எடுத்துக் கொள்ளவும் சம்மதிக்கிறானே ஒழிய, இதற்கு விரோதமாகப் பேசுகிறானா? நடக்கிறானா? என்று கேட்கிறேன்.** அப்படிப் பேசினால் - நடந்தால் அதுதானே வகுப்பு வாதமாகும்? உரிமையை, நேர்மையை, நீதியை விரும்புவது வகுப்புவாதமானால் அதை வகுப்புவாதம் என்று ஒரு பார்ப்பான் சொன்னால் அதைத் தமிழன் மனுதர்மத்தில் சொல்லப்படுவதுபோல் - ஆயுதம் கொண்டு போர் நடத்தியாவது அவனை ஒழித்துக்கட்டி உரிமையை, நேர்மையை நிலைநிறுத்த வேண்டியதுதானே சுயமரியாதை தர்மம் (கடமை) ஆகும்?

**விகிதாசாரம் கொடு என்று கேட்பது வகுப்புவாதமானால் விகிதத்துக்கு மேல் அனுபவிப்பது என்ன ஆகும்? அது வகுப்புத் திருட்டு, வகுப்புக் குற்றம், வகுப்பு அயோக்கியத்தனம் தானே ஆகும்?**

இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்த தமிழ் மகனின் இந்நாட்டு ஆட்சியை, பல்லாயிரம் ஆண்டாக ஆண்டு வந்த தமிழ்மகனை, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டில் தன் உடலுழைப்பால், இந்நாட்டையே இந்நிலைக்கு அமைத்து, இந்நாட்டு மக்களுக்கு உணவு, உடை, வீடு முதலிய உற்பத்தி செய்து மக்களுக்கு அளித்த தமிழ்மகனை "இந்நாட்டு ஆட்சி அமைப்பில் தனிவிகித உரிமை தனக்கு வேண்டும்" என்று அவன் கேட்பது வகுப்பு வாதம் என்றால் இந்நாட்டில் அந்நியனின் வகுப்பு ஆதிக்கம் எவ்வளவு உச்சநிலைக்குப் போய்விட்டது; இந்நாட்டு மக்களின் (தமிழனின்) நிலை எவ்வளவு கீழ்நிலைக்குப் போய்விட்டது என்பதைக்காட்டும் அறிகுறிதானே அது?

நான் இன்று பார்ப்பானை நேரிடையாகவே ஒரு கேள்வி கேட்கிறேன்:-

"ஓ பார்ப்பானே! உனக்கு ஏது பங்கு? இந்நாட்டில் உனக்கு உரிமை ஏது? உனக்கு இந்நாட்டில் பிச்சை எடுக்கும் உரிமை தானே உண்டு? நீ பிச்சைக்காரன்தானே அதிலும் உழைப்பு இல்லாமல் வாழும் சோம்பேறிப் பிச்சைக்காரன்தானே. இதுதானே உனது ஜாதி தர்மம் (கடமை)?

ஒரு வயலில் தானியம் விளைவித்து, அறுப்பு அறுத்து, களத்தில் போட்டு அடித்து தூற்றிக் குவித்தால், அந்தப் பண்டம் யார் யாருக்கு உரிமை?

நிலத்தைக் காடுவெட்டி பக்குவப்படுத்திய அல்லது அதைப் பாடுபட்டு சம்பாதித்த பணத்தைக் கொடுத்துவாங்கிய நிலச் சொந்தக்காரனுக்கு உரிமை, 'உழுது, தண்ணீர் பாய்ச்சிய' உடல் உழைப்பாளிக்கு உரிமை அவ்வளவுதானே! பயிர் அடிக்கும்போது பக்கத்தில் வந்து நிற்கும் பாடுபடாத சோம்பேறிப் பிச்சைக்காரனுக்கு அதில் உரிமை உண்டோ? வேண்டுமானால் அப்படிப்பட்டவனுக்கு "பிச்சைக்கு உரிமை உண்டு" என்று சொல்லலாம். அந்தப் பிச்சைகூட பொருளை உடையவனது இஷ்டத்தைப் பொறுத்தது. அவனாகப் பார்த்து ஏதோ பிச்சை போடலாம். அதிலும் பொருள் உடையவன்

புத்திசாலியாய் இருந்தால் ‘பிச்சைக்கொடுப்பது நாட்டில் சோம்பேறிப் பசங்களுக்கு உழைக்காமல் வயிறு வளர்க்க ஊக்கம் ஊட்டுவதாகும். ஆதலால் இவனைக் கழுத்தைப் பிடித்து வெளியில் கொண்டுபோய் விட்டுவிட்டு வா” என்று சொல்ல வேண்டியதுதான் தர்மமாகும். அதுபோலத்தானே இந்தப் பார்ப்பான்?

நாட்டு அமைப்புக்கு, நாட்டு வளத்திற்கு இந்தப் பார்ப்பான் செய்த காரியமென்ன? “பிறவியில் உயர்ந்தவன்” என்கின்ற ஒரு அயோக்கியத்தனமானதும் - பித்தலாட்டதனமானதுமான உரிமை கொண்டாடி, மக்களை ஏய்த்து நேர்மை கெட்ட தன்மையில் ஆதிக்கம் பெற்று மக்களை ஏய்த்துப் பிழைக்கிறான் என்பதைத் தவிர, இந்தப் பார்ப்பானுக்கு இந்த நாட்டில் என்ன உரிமை உண்டு? யாராவது சொல்லட்டுமே? ஆதாரம் காட்டட்டுமே பார்க்கிறேன்.

இந்தப் பார்ப்பான் தன் வாயாலேயே தன்னை அந்நியன் என்பதாக அதாவது தான் வேறு ஜாதி, வேறு பிறவி என்று சொல்லிக் கொள்ளுகிறான். தனது நாடும் வேறு நாடு என்கிறான். இந்த நம் நாட்டைப்பற்றி, இந்த நம் ஜாதி - பிறப்பைப் பற்றி, நாட்டு உரிமை, ஜாதி உரிமை பற்றி, தனக்கு எந்தவிதமான கவலையும் இல்லாமல் இதை அடிமை நாடாகவும், இந்த நம் ஜாதி மக்களை அடிமை மக்களாகவும் நடத்துவதுதான் தன் ஜாதி - பிறவியின் கடமை என்கிறான்! அதற்கு சட்டம், சாஸ்திரம் காட்டுகிறான். இந்த நம்நாட்டு ஆட்சி உரிமையைப் பற்றி தனக்குச் சிறிது கூட கவலை இல்லை என்பதைத் தைரியமாகக் காட்டிக் கொள்வதற்கு வெட்கப்படாமல், இந்த நாட்டு நீதி, நிர்வாகப் பதவிகள், இந்நாட்டு மக்களுக்கு சிறிய உத்தியோகம் கொடுக்கும் அதிகாரம் (பப்ளிக் சர்விஸ் கமிஷன்) ஆதிக்கம் ஆகிய உரிமை எதுவும், இந்த நாட்டு (மாநில) ஆட்சி உரிமையே இருக்கக்கூடாது என்கிறான். தன் ஜாதியைத் தவிர மற்ற இந்த நாட்டான் எவனுக்கும் படிப்பே கூடாது, பதவி கூடாது, மனிதத் தன்மை, மரியாதைக் கூடாது என்று வெளிப்படையாகவே முயற்சி செய்வதோடு பச்சை அயோக்கியத்தனமாக நமக்கு, வகுப்புரிமைக்கு, வகுப்புநீதிக்கு தகுதி இல்லை, திறமை இல்லை - என்கிறான். இவைகளைக் கேட்பதையே வகுப்புவாதம் - மாபாதகம் என்கிறான். எந்த நிலையில் இந்தப்படி சொல்லுகிறான் என்பதை பொதுமக்கள் சற்று அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இந்த நாட்டில் நம் ஜாதியைச் சேர்ந்தவர்களும் இந்தப் பார்ப்பனர்களால் “நம் ஜாதியைவிடக் கீழான 5ஆவது ஜாதி”

என்று கூறப்பட்டுப் "பார்க்கப்படக் கூடாதவர்கள், தொடப்படக் கூடாதவர்கள்" 100க்கு 5 பேர்கள் கூட படிக்காதவர்களாக - ஆக்கப்படக் கூடாதவர்களாக - நடத்தப்பட்டு வந்தவர்கள், கடை மிருகங்களின் உரிமைகூட அளிக்கப்படாமல், காட்டுமிராண்டிகளாக இருத்தப்பட்டு வந்தவர்கள், ஆரியர்களுக்கு இன்று - இன்றல்ல - 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே இந்நாட்டு அரசியலில் வகுப்பு உரிமை வகுப்பு விகித எண்ணிக்கைப்படி அடையும்படியான தன்மையை வலுவில் அளித்திருக்கும் நிலைமையில் இந்தப் பார்ப்பனர் நாம் கேட்கும் விகிதாசாரத்திற்கும் உட்பட்ட உரிமையை "வகுப்புவாதம் இது எல்லா பாதகங்களையும் விடக் கொடுமையான மாபாதகம், இதை எப்படியாவது ஒழித்தாக வேண்டும்" என்று கூப்பாடு போட்டு, நாம் வகுப்புரிமை கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் - நமக்கு பதவி எப்போதோ, எந்தக் கீழான நிலைமையிலோ கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் - மண்டை அடி அடித்து சித்திரவதை செய்வதைப் போல் "நமக்கு தகுதி இல்லை, திறமை இல்லை" என்று சொல்லி இழிவுபடுத்துகின்ற கொடுமையும், தொல்லையும் விளைவிக்கின்றது என்றால், இவர்களை நம் நாட்டில் நாம் வைத்துக் கொண்டிருப்பது, வாழவிட்டுக் கொண்டிருப்பது, எவ்வளவு நமது கோழைத்தனத்தையும் இழிதன்மையையும் காட்டுகிறது என்பதை, சுதந்திரா கட்சி முதல் மற்ற எல்லாக் கட்சியில் இருக்கும் தமிழ் மக்களையும் வணக்கமாகக் கேட்கிறேன்.

உத்தியோகம், பதவி என்பது இந்நாட்டு மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் ஆயுதங்கள் ஆகும். நல்ல சம்பளம் பெறுவதுடன் ஆதிக்கம் செலுத்துவதோடு ஒரு தாழ்ந்த உத்தியோகத்தில் இருப்பவனும் இந்நாட்டு சராசரி மக்கள் வாழ்வைவிட இரண்டு பங்கு மூன்று பங்கு, சில நூறு பங்கு இருநூறு பங்கு, உயர்ந்த வாழ்வும் அந்தஸ்தும் உடைய தன்மையுடையதாகும். அதிலும் இவை பெரிதும் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாகி விட்டதால், 100க்கு 90 மக்களுக்கு எஜமான ஸ்தானமாகவே ஆகிவிட்டன! இந்த பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட பதவிகள் அயோக்கியத்தனமான முயற்சியால் நமக்குக் கிடைக்காதபடி அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். எல்லாம் வெள்ளையன் காலத்தில் சீமைக்குப் போனதுபோல், இன்று ஆரிய ஸ்தானமான டெல்லிக்குப் போய்விட்டன; தலைமை அய்க்கோர்ட் (உச்ச நீதிமன்றம்) நாம் நெருங்க முடியாதபடி டெல்லிக்குப் போய்விட்டன; சட்டசபை மெம்பர், மந்திரி நியமனம் டெல்லி தயவில் இருக்கிறது. பொதுக்கல்வி, தொழிற்துறைக்கல்வி டெல்லி ஆதிக்கத்துக்குப் போக வேண்டும் என்கிறான். பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமனம் டெல்லிக்குப் போக வேண்டும் என்கிறான். இந்த

கமிஷன் - ரயில்வே, தபால், சுங்கம் முதலிய இலாகாக்களின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் டெல்லி ஆதிக்கத்தில் இருப்பதாலேயே இந்த இலாகாக்கள் பெரிய பார்ப்பன அக்கிரகாரமாகவே இருந்து கொண்டு, பியூன்கள், கீழ்த்தரவேலை ஆகியவை மட்டும் 160க்கு 100 தமிழனுக்கு ஆகவே இருந்து இழிவுபடுத்தி வருகிறது.

உடலால் உழைத்து சாப்பாட்டுக்கும் போதாமல் திண்டாடும் வேலைகள் யாவும் நமக்கு; உழைப்பில்லாமல் கொள்ளை அடித்து சுகபோக வாழ்வு வாழும் பதவி அத்தனையும் அந்நியனான - பார்ப்பானுக்குத்தான் இருக்க வேண்டுமானால் நாம் ஜனநாயகத்திலோ சுயராஜ்யத்திலோ இருக்கிறோம் என்று, பார்ப்பான் வைப்பாட்டி மகனாய் இல்லாமல், சுயமரியாதைத் தமிழ் மகனாக இருக்கும் யார்தான் சொல்ல முடியும்?

நம் நாட்டின் இழிநிலைமையானது, நம் தமிழ் இனத்தின் மானங்கெட்ட தன்மையானது தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு ஆட்சியில் உள்ள அரசியல் சம்பந்தப்பட்ட அரசியல் ஆதிக்கத்திற்கு உள்பட்ட எல்லா ஸ்தாபனங்களிலும் வகுப்புரிமை (ஜாதி உரிமை), வகுப்பு (ஜாதி) விகிதப்படி இருக்க வேண்டும் என்கின்றதில் மானம், இலட்சியம் திராவிடர் கழகத்தைவிட வேறு எந்த அரசியல் சமுதாய கட்சிக்கும், ஸ்தாபனத்திற்கும் இல்லாமல் இருப்பதற்கு அறிகுறியாகும்.

ஆகவே, நாம் பார்ப்பனர்களால் கூறப்பட்டு நம்மை இழிவுபடுத்தப்படும் "வகுப்பு வாதம்" என்னும் ஜாதி உரிமை வாதமானது எல்லா சுத்த தமிழனுக்கும் பிறப்புரிமை என்று சொல்லுவதோடு, அதில்லாதவன் சரியான பிறப்புக்காரனாக இருக்க முடியாதென்றே சொல்லுவேன்.

**- தந்தை பெரியார்**

குறிப்பு: அரசியல் மைனாரிட்டி வகுப்பு பாதுகாப்பு என்பது அரசியல் சம்பந்தப்பட்ட அதாவது படிப்பிலும் - உத்தியோகம், பதவி ஆகியவற்றிலும் யார் குறைந்த விகித எண்ணிக்கை உடைய மக்களாக - வகுப்பாக - ஜாதியாக இருக்கிறார்களோ அவர்களைத்தான் மைனாரிட்டி வகுப்பு என்று கூறவேண்டும் என்பதுடன் இந்த மைனாரிட்டிக்குத்தான் பாதுகாப்பும் சலுகையும் அளிக்க வேண்டும் என்று சொல்வேன்.

**வகுப்புரிமைவாதி ஈ.வெ.ராமசாமி**

**- 'விடுதலை', தலையங்கம் 13.01.1961**

# ஜாதியை ஒழிக்கவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

**ஜாதியை ஒழிப்பதாகக் கூறும் பெரியார் ஜாதி அடிப்படையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு கேட்கிறாரே - இது சரியா என்று கேட்பவர்கள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்! உண்மையிலேயே மேல்ஜாதி, கீழ்ஜாதித் தன்மையை ஒழிக்கவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பதை ஆணித்தரமாக நிறுவுகிறார் தந்தை பெரியார் இக்கட்டுரையில்.-ஆர்)**

சில அறிவாற்றல் அற்றவர்களும், தங்கள் (ஜாதி) ஜன எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தை விட அதிக எண்ணிக்கையான பதவி, உத்தியோகம் அனுபவிக்கும் ஜாதியாரும், நான் போராடும் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை,

“ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும் இராமசாமி, ஜாதியைக் காப்பாற்றும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கிறார்” என்று சொல்லுகிறார்கள். இப்படிக் கூறுகிறவர்களைப்பற்றி நான் உண்மையாயும், உறுதியாயும் கூறுவது என்னவென்றால்,

இவர்கள் அறிவு ஆற்றல் இல்லாத பேதைகளாக இருக்க வேண்டும்; அல்லது சமுதாயத்தில் தங்களை “மேல்ஜாதி” என்று சொல்லிக் கொண்டும், அதிகமான பதவிகளை அனுபவித்துக் கொண்டும், இருப்பதற்குப் பங்கம் வரக்கூடாது என்று கருதி, அவ்வுரிமையைத் தடுக்கும், சூழ்ச்சி செய்யும் அயோக்கியர்களாக இருக்க வேண்டும் என்றே கூறுவேன்.

### சமநிலை எய்துவதெப்படி?

ஏன் எனில், மனித சமுதாயத்தில் பிரபு – தரித்திரன், செல்வர்–வறியர், பணக்காரர் – ஏழைகள் என்பதாக இரு பிரிவு (ஜாதி) மக்கள் ஒரு நாட்டில் இருப்பார்களானால், அவர்கள் இருவரையும் சம அளவு செல்வமுள்ள (ஜாதியாக) ஆக்க வேண்டுமானால், பிரபு–செல்வர்–பணக்காரர்

என்பவர்களிடம் இருக்கும் சொத்துக்களைப் பகிர்ந்து தரித்திரர், வறியர், ஏழைகள் என்பவர்களான பிரிவினருக்கு (ஜாதியாருக்கு) சமவிகிதம் கொடுத்தால்தானே, ஏழை மக்கள் செல்வத்தில் சம நிலைமை அடையமுடியும்? மற்றும் செல்வவான்களுக்குச் செல்வம் சேர்க்க என்னென்ன வழி உண்டோ அதையும் ஏழையாக இருக்கும் மக்களுக்கும் கிடைக்கும்படிச் செய்தால்தானே சமநிலையில் இருப்பதற்குத் தகுதி செய்ததாகும்? இப்படிச் செய்வதை விட்டு விட்டு, (பேதநிலையை ஒழிப்பது என்றால்) "பேதநிலை" என்று ஓர் உருவம் செய்து அதை உடைத்து நொறுக்கித் தூள் ஆக்குவது அல்லது ஏழை - பணக்காரன் ஒழிக என்று ஒரு காகிதத்தில் எழுதி அதை நெருப்பில் போட்டுக் கொளுத்தி சாம்பலாக்குவதா? என்று கேட்கிறேன்.

அது போலவே மேல்ஜாதி - கீழ்ஜாதி என்கிற அமைப்பை ஒழிக்க வேண்டும் என்று நான் சொல்லும்போது, **மேல்ஜாதி - கீழ்ஜாதி என்கிற தன்மையினால் ஒரு கூட்டம் அடைந்திருக்கும் அதிக பங்கை, உரிமையையும், போக போக்கியத்தையும் - கீழ் நிலையில் இருந்து கேடு அடையும் மக்கள் நிலைமையையும் ஒழிக்க வேண்டும்** என்ற தத்துவத்தில்தான் நான், ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறேனே ஒழிய, மற்றபடி விவசாயி, குடித்தனக்காரன், கூலிஆள், கொல்லன், தட்டான், நெசவாளி, கொத்தனார், செருப்பு தைப்பவன், பறை அடிப்பவன், கக்கூசு எடுப்பவன், கோயில் பூஜை செய்கிறவன், வர்த்தகன், செட்டு பண்ணுகிறவன், யுத்த வீரன், சாவு - மணச்சடங்கு செய்கிறவன், அரசுப் பணி புரிகிறவன் முதலிய தொழில்களையோ, தொழிலாளிகளையோ ஒழிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லையே! அறிவினால் ஒருவன் "மேல்ஜாதி"யானால், அறிவில்லாத கீழ்ஜாதியானுக்கும் அறிவு கொடுத்து கீழ்ஜாதித் தன்மையை ஒழி என்கிறேன்.

### கீழ்ஜாதித் தன்மையை ஒழித்துக்கட்டு

உத்தியோகத்தினால் ஒருவன் "மேல்ஜாதி"யானால், "கீழ்ஜாதி"க்காரனுக்கும் "மேல்ஜாதியான்" பெற்றிருக்கும் அளவுப்படியே உத்தியோகம் கொடுத்து, "கீழ்ஜாதி"த் தன்மையை ஒழி என்கிறேன். 'தகுதியால்' ஒருவன் "மேல்ஜாதி"யானால், "மேல்ஜாதியான்" பெற்றிருக்கும் தகுதி முறையே "கீழ்ஜாதி"யானும் பெறும் அளவுக்குத் தகுதியைக் கொடுத்து "கீழ்ஜாதி"த் தன்மையை ஒழி என்றுதான் நான் கேட்கிறேன். இப்படி ஒவ்வொன்றுக்கும் நான் "மேல்ஜாதி" - "கீழ்ஜாதி" என்று சமவிகித உரிமை கேட்பதால், "கீழ்ஜாதி" - "மேல்ஜாதி" முறையை, அமைப்பை நான் காப்பாற்றுகிறவனாவேனா? இது புரியாமல் முட்டாள்களும், புரிந்த அயோக்கியர்களும் நான்

“ஜாதி ஒழிப்பதாகக் சொல்லிக்கொண்டு ஜாதியைக் காப்பாற்றுகிறேன்” என்றால், நான் அதற்குப் பயந்து கொண்டு அந்த முயற்சியை விட்டு விடுவதா?

### எதிர்ப்பவர் வேறு வழி சொல்லட்டுமே

இந்தப் பிரகஸ்பதி யோக்கியர்களாவது, இந்தப்படியான நிலைமையை, “மேல்ஜாதி-கீழ்ஜாதி”யை ஒழிக்க ஏதாவது வழி சொல்லிவிட்டு என்னைக் குற்றம் சொல்லுகிறார்களா?

### யோக்கியமான காரியத்தைக் கேட்கும் நான் ஜாதியைக் காப்பாற்றுகின்றவனா?

### அரசியல் சட்டத்திலேயே வகுப்புவிகித முறை

ஆறு பேர்களில் நான்கு பச்சைப் பார்ப்பனரும், ஒரு பஞ்சமரும், ஒரு முஸ்லிமும் கூடி, பார்ப்பனர் அல்லாத “சூத்திரர்” “நாலாம் ஜாதியாருக்கு”ப் பிரதிநிதியே இல்லாத ஒரு குழு (நான்கு பச்சைப் பார்ப்பனர்கள்) சேர்ந்து, சூழ்ச்சிகரமாய் சிந்தித்து, சிந்தித்து அரசமைப்புச் சட்டத்திலேயே நாலாம் வகுப்பாரை - “சூத்திரரை”த் தவிர்த்து மற்ற அய்ந்தாம் வகுப்புக்கு வகுப்பு வாரி (ஜாதிவாரி) பிரதிநிதித்துவம் எண்ணிக்கைப்படி ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்த (வகுப்புவாரி பிரதிநிதித்துவ) முறையை, ஜாதியைக் காப்பாற்ற என்று கருதித்தானே ஏற்படுத்தினார்கள்? இதை எந்த அறிவாளியோ, எந்த முட்டாளோ அந்த நான்கு பார்ப்பனர்களையும் அல்லது அரசாங்கத்தையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்தி ஜாதியைக் காப்பாற்றுகிறார்கள், என்று குற்றம் சாட்டவில்லையே! அப்படி இருக்க, அதைவிட யோக்கியமும், அவசியமுமான காரியத்தைக் கேட்கும் நான், ஜாதி காப்பாற்றுகிறவனாவேனா? பெரிய, பெரிய நிலச் சொந்தக்காரர்களிடம் இருக்கும் பூமிகளை ஏழை விவசாயிகளுக்கும், பூமி இல்லாதவர்களுக்கும் பூமி கிடைக்கும்படியாகச் செய்ய ஒவ்வொருவருக்கும் (மிராசுதாரருக்கும், மற்றவருக்கும்) இவ்வளவு விகிதம்தான் பூமி இருக்க வேண்டும் என்று சட்டம் செய்ததானது, மிராசுதார்-விவசாயி வித்தியாசங்களை - (மற்றவர்கள் என்ற) பேதங்களைக் காப்பாற்றுகிறது சர்க்கார்” என்று எந்த அறிவாளியும், மடையனும் கூறவில்லையே!

---

*1. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், 2. கே.எம்.முன்சி*
*3. சர்.என்.கோபால்சாமி அய்யங்கார், 4. டி.டி.கிருஷ்ணமாசாரி,*
*5. டாக்டர் முகமது சாதுல்லா*

■

பகுதி - 2

இடஒதுக்கீடு:

# தந்தை பெரியாரின் கருத்து முத்துக்கள்

# அனைவருக்கும் அனைத்தும்




“தனக்கு என்னென்ன வசதிகள், நன்மைகள், பெருமைகள் தேவையென்று கருதப்படுகிறதோ, அவற்றைச் சமுதாயத்தில் உள்ள அனைவரும் அடையச் செய்யும் வழியில் நடப்பதே உண்மையான நாகரிகம் என்பதாகும்.”

**- தந்தை பெரியார்**

**நூல்: ‘நவமணிகள்’**


# தாயுள்ளம்



ஒரு தாய், வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு குணமாக இருக்குமோ அதுபோலத்தான் எனக்குத் தோன்றுகிறது. மற்றும் அந்தத் தாய், தனது மக்களின் - உடல்நிலையில் இளைத்துப்போய் வலிவுக்குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போசனையைவிட எப்படி அதிகமான போசனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தைகளாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அதுபோலத்தான் நான் மற்ற வலுக்குறைவான பின்தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவு நான் பார்ப்பனர்களிடமும் மற்ற வகுப்புகளிடமும் காட்டிக்கொள்ளும் உணர்ச்சியாகும்!

**- தந்தை பெரியார், 'விடுதலை', 01.01.1962**


# உறுதியாகச் சொல்லுவோம்



வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தான்–
தேச ஒற்றுமைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும், பரஸ்பர நம்பிக்கைக்கும், சஞ்சீவி என்பதையும் நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

**– தந்தை பெரியார்**
**'குடிஅரசு', 13.12.1925**

# உரிமையைக் கேட்பதில் என்ன தவறு ?




எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று
ஒரு மதம், ஒரு ஜாதி, தனி வகுப்பு
என்பதாகப் பிரிக்கப்பட்டதோ, பின்பு - அவன்
தனது மதம், ஜாதி, வகுப்புக்கு என்று
உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ,
அயோக்கியத் தனமோ இருக்க முடியும்?

**- தந்தை பெரியார்**

**தந்தை பெரியார் 84ஆவது பிறந்தநாள் விடுதலை மலர்,**

# ஒரு நாடு



ஒருநாடு என்பது, ஒரு நாட்டிலுள்ள
பல வகுப்பாரின் சேமத்தையும்
பொறுத்ததா? ஒரு வகுப்பாரின்
சேமத்தை மாத்திரம் பொறுத்ததா?

**- தந்தை பெரியார்**

**'குடிஅரசு', 14.02.1926**

# சமமாய் நடத்த வேண்டும்



வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது,
ஒரு தேசத்தின் கட்சியின் பொது உரிமையும்,
அந்நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும்,
எல்லா வகுப்பாரும் ஏற்றத்தாழ்வின்றி
சமமாய் நடத்த வேண்டும் என்பது தான்.

**- தந்தை பெரியார்**

**‘குடிஅரசு’, தலையங்கம், 18.04.1926**


# வேறு மார்க்கம் சொன்னவர் யாரும் இல்லை



வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது
என்பவர்களில் யாரும், இதுவரை அது கூடாது
என்பதற்குச் சரியான காரணமோ அல்லது
எல்லா மக்களுக்கும் சமத்துவமும்,
சம சந்தர்ப்பமும் கிடைக்கும் படியான
வேறு மார்க்கமோ - எடுத்துச் சொன்னவர்
யாரும் இல்லை.

**- தந்தை பெரியார்**
**'குடிஅரசு', 16.12.1928**

# எப்படிக் குற்றமாகும்?



பிறவியின் காரணமாய் ஜாதி பிரித்துக்
கோவிலுக்குள் போவதைக்கூடத் தடுப்பதும்
ஒப்புக் கொள்ளாததுமான ஒரு ஜாதி -
ஒரு சமூகம் - ஒரு ஸ்தாபனம், பிறவி காரணமாகவே
பிரிக்கப்பட்டிருக்கிற பிரிவுகளுக்கு
உத்தியோகத்தில் சம உரிமை கொடுப்பதை
எப்படிக் குற்றமாகச் சொல்லலாம்.

**- தந்தை பெரியார்**

'குடிஅரசு', 02.06.1935

# வகுப்பு இல்லாமல் போய்விடும்




எதற்காக ஆதியில் ‘வகுப்புவாதம்’ ஏற்பட்டதோ அந்தக் காரியம் அழிவதன் மூலம் வகுப்பு இல்லாமல் போய்விடும் என்று கருதியே வகுப்புரிமை அளித்திருக்கிறார்கள்.

**- தந்தை பெரியார்**

**‘குடிஅரசு’**, 08.08.1937


# பார்ப்பனர் இல்லாத நாடு



பார்ப்பனர் இல்லாத ரஷ்யாவிலும், ஆப்பிரிக்காவிலும் என்ஜினீயர் வேலை, வைத்திய வேலை சரியாக நடக்கின்றதா இல்லையா? என்று கேட்கிறோம்.

**- தந்தை பெரியார்**
**'குடிஅரசு', 27.01.1945**

# தகுதி திறமை என்பது என்ன?



'தகுதியும் திறமையும்' பெறுவதற்காகத் தானே
பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்புகிறோம்?
சேர்த்துக் கொள்வதற்கு முன்னே தகுதி, திறமை
கேட்கப்படுமானால் 'தகுதி, திறமை'
என்பதென்ன? குழந்தை பிறக்கும் போதே
தாயின் வயிற்றிலிருந்து கொண்டுவரப்படக் கூடிய
ஒரு பொருளா? நம் பிள்ளைகளை
என்ன கிணற்றில் தள்ளுவதா
'தகுதி - திறமை' பெற?

**- தந்தை பெரியார்**

**'விடுதலை', 16.10.1947**

# கீழ்ஜாதித் தன்மையை ஒழி



அறிவினால் ஒருவன் மேல் ஜாதியானால் அறிவில்லாத கீழ்ஜாதியானுக்கு அறிவு கொடுத்து கீழ்ஜாதித் தன்மை ஒழி என்கிறேன்.

உத்தியோகத்தினால் ஒருவன் 'மேல்ஜாதி'யானால் கீழ்ஜாதிக்காரனுக்கும், மேல்ஜாதியான் பெற்றிருக்கும் அளவுப் படியே உத்தியோகம் கொடுத்து, கீழ்ஜாதித் தன்மையை ஒழி என்கிறேன்.

தகுதியால் ஒருவன் 'மேல்ஜாதி'யானால் மேல்ஜாதியான் பெற்றிருக்கும் தகுதி முறையே 'கீழ்ஜாதியானும்' பெறும் அளவுக்குத் தகுதியைக் கொடுத்து கீழ்ஜாதித் தன்மையை ஒழி என்றுதான் நான் கேட்கிறேன்.

இப்படி ஒவ்வொருவருக்கும் நான் மேல்ஜாதி - கீழ்ஜாதி என்று சமவிகித உரிமை கேட்பதால், 'கீழ்ஜாதி' 'மேல்ஜாதி' முறையை, அமைப்பை நான் காப்பற்றுகிறவனாவேனா? இது புரியாமல் முட்டாள்களும், புரிந்த அயோக்கியர்களும் நான் ஜாதியை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஜாதியைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்கிறார்கள் என்றால், நான் அதற்குப் பயந்து கொண்டு அந்த முயற்சியை விட்டு விடுவதா?

**- தந்தை பெரியார், 'விடுதலை', 17.01.1964**

# ஜாதியினால் கேடு




இந்த நாட்டில் ஜாதியினால் கேடு இருக்கிறது என்றால் அதற்கு ஆக்கம் கொடுப்பது எது? படிப்பும், உத்தியோகமும் அதில் இருக்கும் இமயமலை வித்தியாசம்(கம்மி - ஜாஸ்தி) தானே! அதை சரிபடுத்தி கல்வியும், உத்தியோகமும் சமவிகிதமாக ஆக்கிவிட்டால் ஜாதியினால் ஏற்படும் நன்மை - கேடு (இழிவு - பெருமை) மறைந்து சமநிலை ஏற்பட முடியுமா, இல்லையா? அதற்குப் பள்ளியில், உத்தியோகத்தில் ஜாதி விகிதம் சமமாக (விகிதப்படி) இருக்க வேண்டும் என்று கேட்பதில் தவறு என்ன? இதனால் ஜாதி, அதாவது ஜாதிக் கொடுமை கேடு எப்படி நிலைத்துவிடும் என்பது எனக்குப் புரியவில்லை.

**- தந்தை பெரியார்**

**‘விடுதலை’, 17.01.1964**

# மிராசுதாரர் - விவசாயி



பெரிய, பெரிய நிலச்சொந்தக்காரர்களிடம்இருக்கும் பூமிகளை ஏழை விவசாயிகளுக்கும், பூமி இல்லாதவர்களுக்கும், பூமி கிடைக்கும்படியாகச் செய்ய, ஒவ்வொருவருக்கும் (மிராசுதாரருக்கும், மற்றவருக்கும்) இவ்வளவு விகிதம் தான் பூமி இருக்க வேண்டும் என்று சட்டம் செய்ததானது, மிராசுதாரர் – விவசாயி வித்தியாசங்களை (மற்றவர்கள் என்ற) பேதங்களைக் காப்பாற்றுகிறது சர்க்கார் என்று எந்த அறிவாளியும் மடையனும் கூறவில்லையே!

**– தந்தை பெரியார்,**

**‘விடுதலை’, 17.01.1964**

# பேதைகள் அல்லது அயோக்கியர்கள்



“ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும் இராமசாமி, ஜாதியைக் காப்பாற்றும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கிறார்” என்று சொல்லுகிறார்கள். இப்படிக் கூறுகிறவர்களைப்பற்றி நான் உண்மையாயும், உறுதியாயும் கூறுவதென்னவென்றால், இவர்கள் அறிவு ஆற்றல் இல்லாத பேதைகளாக இருக்க வேண்டும் அல்லது சமுதாயத்தில் தங்களை மேல் ஜாதி என்று சொல்லிக் கொண்டும், அதிகமான பதவிகளை அனுபவித்துக் கொண்டும் இருப்பதற்குப் பங்கம் வரக்கூடாது என்று கருதி, அவ்வுரிமையைத் தடுக்கும், சூழ்ச்சி செய்யும் அயோக்கியர்களாக இருக்க வேண்டும் என்றே கூறுவேன்.

**- தந்தை பெரியார்**

**‘விடுதலை’, 17.01.1964**


# பாஸ்பண்ணாதவனை பெயில் ஆக்குகிறோமே !



நாம்தான் பாஸ் பண்ணாதவனை
பெயில் ஆக்குகிறோமே!
'தகுதி - திறமை' பார்த்துச்
சேர்க்கப்பட்டவனும்
பெயில் ஆகிறானே!

**- தந்தை பெரியார்,**
**'விடுதலை', 17.07.1972**


# தகுதி, திறமை, தரம் - அர்த்தம் என்ன ?



பாஸ் செய்த பின்பு -
'தகுதி திறமை', தரம்
எதற்காகப் பார்க்கப்படுகின்றது.
அது எதற்காக வேண்டும்?
அதன் அர்த்தம் என்ன?
அதன் பலன் என்ன?

**- தந்தை பெரியார்,**
**'விடுதலை', 17.07.1972**


# நீதிக்குத் தகுதி - திறமை அனுபவம் என்ன இருக்கிறது ?



25 ஆண்டு சிவில் அனுபவம் பெற்ற ஜில்லா ஜட்ஜ்,
ஜில்லா ஜட்ஜாகவே ரிட்டையராகி விடுகிறான்.
பித்தலாட்டத்திலும், புரட்டிலும் பெயர் பெற்ற,
மனசாட்சியே இல்லாதவன் தொழிலில்,
வாதத்தில் நீதி, நேர்மை, யோக்கியம் அற்ற
ஒரு வக்கீல், திடீரென்று அய்க்கோர்ட்,
சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்ஆகி விடுகிறான்.
இதில் **நீதிக்குத் தகுதி – திறமை**
**அனுபவம் என்ன இருக்கிறது?**

**– தந்தை பெரியார்,**
**‘விடுதலை’, 03.07.1965**


# தகுதி - திறமை சூழ்ச்சியாகும்



100க்கு 3 விகிதமே உள்ள பார்ப்பனர்,
எந்த உழைப்புமின்றி சுக வாழ்விலே
இருந்து கொண்டு, மற்ற மக்களைத்
தலையெடுக்க வொட்டாமல் ஆழ்த்தி வைத்து
ஏகபோக ஆதிக்கம் செலுத்தவே,
இந்தத் தகுதி - திறமை சூழ்ச்சியாகும்.

**- தந்தை பெரியார்,**
**'விடுதலை', 07.05.1968**

# எப்படியோ உச்சநிலைக்குப் போனவன்




உண்மையான ‘தகுதி - திறமை’ என்பதை நாம் மறுப்பதில்லை. ஆனால் அது எந்தெந்தக் காரியத்துக்கு, எந்தெந்த அளவுக்குத் தேவை என்பதைப் பொறுத்ததா? அல்லது எப்படியோ உச்ச நிலைக்குப் போனவனே அங்கு நிலையாய் நீடிக்க வேண்டுமென்பதைப் பொறுத்ததா? என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும்.

**- தந்தை பெரியார்,**

**‘விடுதலை’, 08.05.1968**


# பாரபட்சம் காட்டக் கூடாது



பதவிகள் வழங்குவதில், உத்தியோகம் வழங்குவதில் அரசாங்கம் எந்த ஜாதியாருக்கும், எந்த மதத்தினருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது. ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு மதத்திற்கும் அதைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அந்த எண்ணிக்கை விகிதப்படி, பதவி - உத்தியோகம் முதலியவைகளை வழங்க வேண்டும்.

**- தந்தை பெரியார்,**
**'விடுதலை',05.03.1969**

# வகுப்புரிமை நிரந்தரமானதா ?



சட்டத்தின் மூலம் ஜாதிகள்
ஒழிகின்றபோது சட்டத்தின் மூலம்
வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை
எடுத்துவிடுவது சிறிதும்
சிரமமான காரியம் அல்ல.

**– தந்தை பெரியார்,**
**‘குடிஅரசு’, 19.07.1936**

# தந்தை பெரியார் போராட்டத்தின் காரணமாக முதன்முதலாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது

1951இல் தந்தை பெரியார் போராட்டத்தின் காரணமாக, முதன் முதலாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. 243 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 7 பார்ப்பனர்கள் மட்டும் எதிர்ப்பாகவும் ஓட்டளித்தனர். அரசியல் சட்டத்தில் 15 (4) சேர்க்கப்பட்டது. சட்டமன்றத்துக்கோ, பாராளுமன்றத்துக்கோ செல்லாத தந்தை பெரியாரால் இந்தியாவில் வசிக்கும் அனைத்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், கல்வியிலும் - வேலை வாய்ப்புகளிலும் வகுப்புவாரி உரிமை வழங்கப்பட்டது!

**- கி.வீரமணி**

**நூல்: திராவிடர் இயக்க நூறாண்டு வரலாற்றுச்சுவடுகள்...**

# பொதுவாழ்வின் அணுகுமுறை



வகுப்புரிமையை ஆதரிக்காத எந்த அரசினையும்
தந்தை பெரியார் ஆதரிக்கவில்லை,
வகுப்புரிமையைக்  காத்த எந்த கட்சி ஆட்சியாயினும்
அதை ஆதரிக்காமல் விட்டதும் இல்லை.
இதுதான் தந்தை பெரியார் அவர்களது
60 ஆண்டுக்கால
பொதுவாழ்வின் அணுகுமுறையாகும்.

**- கி.வீரமணி**

# அரசு உத்தியோகங்களில் தமிழர்களின் பரிதாப நிலை

1912 இல் பார்ப்பனர் அல்லாதாருக்கான ஓர் அமைப்பைத் தொடங்கிய கால கட்டத்தில் நம் நாட்டின் நிலை என்ன?

**டெபுட்டி கலெக்டர்கள் 55%, சப் ஜட்ஜ்கள் 83%, மாவட்ட முன்சீப்புகள் 72% பார்ப்பனர்களாகவே இருந்தனர் என்ற நிலையை நினைத்துப் பாருங்கள்.**

மக்கள் தொகையில் பார்ப்பனர் - 3%

மக்கள் தொகையில் பார்ப்பனர் அல்லாதார் - 97%

## 1900 முதல் 1940 வரை அரசு உத்தியோகங்களில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார்

### பதிவுப் பெற்ற (கெசட்டட்) பதவிகள்

| ஆண்டு | மொத்தம் | விழுக்காடு | பார்ப்பனர் | விழுக்காடு | பார்ப்பனர் அல்லாதார் (தமிழர்கள்) | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1900 | 58 | 100% | 41 | 71% | 17 | 29% |
| 1910 | 60 | 100% | 45 | 75% | 15 | 25% |
| 1920 | 67 | 100% | 47 | 70% | 20 | 30% |
| 1930 | 60 | 100% | 39 | 65% | 21 | 35% |
| 1940 | 62 | 100% | 36 | 58% | 26 | 42% |

# கல்வியில் தமிழர்களின் பரிதாப நிலை

1914ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திய தேர்வுகளில் கலந்துகொண்ட மாணவர் எண்ணிக்கை விவரம் அன்றைய நிலையை தெளிவாக விளக்கும், இந்தப் புள்ளி விவரங்களை அறிந்தால்தான், இன்றைக்குப் பார்ப்பனர் அல்லாதாரின் வளர்ச்சிக்கு எந்த இயக்கம் அடிப்படை? எந்தத் தலைவர்கள் காரணம் என்பதை ஒழுங்காக அறிய முடியும்.

| நடத்தப்பட்ட தேர்வுகள் | பார்ப்பன மாணவர்கள் | | பார்ப்பனரல்லாத மாணவர்கள் (தமிழர்கள்) | |
|---|---|---|---|---|
| | எழுதியவர் | தேறியவர் | எழுதியவர் | தேறிவயர் |
| இண்டர் மீடியட் | 1,900 | 775 | 640 | 240 |
| பி.ஏ. | 469 | 210 | 133 | 60 |
| பி. எ . சி. | 442 | 159 | 107 | 49 |
| எம்.ஏ. | 157 | 67 | 20 | 9 |
| எல்.டி. | 104 | 95 | 11 | 10 |

மத்திய அரசுத் துறைகளில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு, 22.5 விழுக்காடு இடஒதுக்கீடு (15+7.5 விழுக்காடு) இருந்தும், பிற்படுத்தப்பட்டவருக்கு 27 விழுக்காடு சட்டப்படி இருந்தும் பாதி அளவுக்குக் கூட வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை - பறிக்கப்படுகின்றன!

இடஒதுக்கீட்டில் நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் உள்ளது. **தனியார் துறைகளிலும் இடஒதுக்கீடு** என்பது காலத்தின் கட்டாயமாகும்.

சமூகநீதியில் நாம் பெற்றுத் தீரவேண்டிய உரிமைகளை ஈட்டுவதில் நாம் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது!

# இடஒதுக்கீடு கேள்விகளுக்கு

## கி.வீரமணி பதில்கள்

## கேள்வி: மண்டல் குழுவின் முக்கிய பரிந்துரைகள் என்ன ?

---

**பதில்:**

1. மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர் 52 சதவீதம் இருந்தாலும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து எதுவும் வந்துவிடக்கூடாது என்பதால், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். (இது 1980 கணக்குப்படி இப்போது 2016இல் கூடுதல் அதிகம்)

2. திறந்த போட்டி என்ற பொதுப்பிரிவின் கீழ் (Open Competition) தேர்வு செய்யப்படும் பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை இதன்கீழ் வரக்கூடாது.

3. பதவி உயர்வுக்கும் இதே இட ஒதுக்கீடு பொருந்தும்.

4. மூன்று ஆண்டுகளுக்கு Carry Forward என்ற முறை மூலம் ஓர் ஆண்டுக்குரியவர்கள் அவ்வாண்டில் கிடைக்காவிடில் சேர்த்து வைத்து மூன்று ஆண்டுகள் வரை கொண்டு சென்று, அப்படியும் நிரப்ப முடியவில்லை என்றாலே, அதனை திறந்த போட்டி மூலம் பூர்த்தி செய்யலாம்.

5. தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு எப்படி வயது வரம்பில் சலுகை தரப்பட்டுள்ளதோ அதுபோல் பிற்படுத்தப்பட்டோருக்கும் தரவேண்டும். கால நீடிப்பும் செய்ய வேண்டும்.

6. தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு ஒவ்வொரு துறையிலும் உள்ள ரோஸ்டர் முறை இடஒதுக்கீடு போலவே, பிற்படுத்தப்பட்டோருக்கும் இடஒதுக்கீடு ஏற்பாடு செய்யவேண்டும்.

7. பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இந்த ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தேசிய வங்கிகள், அரசு நிறுவனங்களுக்கும் இது அமலாக்கப்பட வேண்டும்.

8. அரசு நிதி உதவி பெறும் தனியார் துறை நிறுவனங்களிலும் இந்த 27 சதவீத இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படல் வேண்டும்.

9. பல்கலைக் கழகங்கள் அவற்றில் இணைக்கப்பட்ட கல்லூரிகள் எல்லாவற்றிலும் இந்தப் பரிந்துரை கடைபிடிக்கப்படல் வேண்டும்.

10. மேற்காட்டிய ஆணைகள் சரிவர நடைமுறைப்படுத்தப் படுகிறதா என்று கண்காணிக்க பல சட்டத்திருத்தங்கள், கண்காணிப்பு குழுக்களுக்கு அரசு ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

11. கல்வி வாய்ப்புக்களை பெருக்கி, இந்த சமூக மக்களுக்கு கல்வி மேம்பாட்டுக்காக தனி ஏற்பாடுகளைச் செய்து, அந்த வாய்ப்புகள் பெருக உதவிட வேண்டும். கல்வியில் இடையில் விட்டுச் சென்றோர் (Dropouts) எண்ணிக்கை குறையும் வகையில் பல புது ஏற்பாடுகள் அவசியம்.

12. நல்ல பண்பாட்டுக் கலாச்சார மேம்பாட்டு சூழ்நிலையை இந்தப் பிள்ளைகளுக்குத் தர வேண்டும். புது விடுதிகள்(Hostels) உருவாக்கி நல்ல படிப்பு பள்ளி, விடுதி வசதிகள் தர அரசுகள் ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும். தொழிற்கல்வி, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் பள்ளிகளில் இட ஒதுக்கீடு செய்வது மிகவும் அவசியம். 15 (4) கீழ் இந்த இடஒதுக்கீடு தனியே செய்ய வேண்டும்.

13. மேல் படிப்புக்கான ‘கோச்சிங் மய்யங்கள்’ இந்த மாணவர்களுக்கு செய்வது அவசியம்.

■

# இடஒதுக்கீடு : சட்டத்தின் நிலை

## கேள்வி : 'கிரீமிலேயர்' என்ற பொருளாதார அளவுகோலை ஏன் வலுக்கட்டாயமாக, அரசமைப்புச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாகப் புகுத்த வேண்டும்?

---

**பதில்:** சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் என்பதுதான் சட்டத்தின் நிலை 2. 15(4) என்ற சட்டப்பிரிவினை - முதலாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தபோது அன்றைய பிரதமர் நேருவும், சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கரும்தான் அரசமைப்புச் சட்டத்தில் (மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு செய்ய உதவிடும் வகையில்) புகுத்தினர். பிற்படுத்தப்பட்டவர்களை அடையாளம் காண 'Socially and Educationally' (சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும்) பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர்.

இச்சட்டத்தின்படி பிற்படுத்தப்பட்டவர்கள் என்பவர்கள் வெறும் சமூக ரீதியாகவோ, அல்லது கல்வி ரீதியாகவோ பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலோ மட்டும் போதாது. இரண்டும் இணைந்ததாக and என்ற சொல் மிக மிக முக்கியம். இந்த இரண்டும் இணைந்த ஒரு வகுப்பினர் (Class of People) தான் ஜாதி என்ற பெயரில் இருக்கிறார்கள்.

இதில் "பொருளாதார (Economically)" அளவுகோலுக்கே வேலையில்லை. இச்சொல்லைச் சேர்ப்பதனால் பெருங் குழப்பம் ஏற்படும் என்று விளக்கி, **பிரதமர் நேரு 1951இல்** நாடாளுமன்ற விவாதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்!

காரணம் பொருளாதார அளவுக்கோல் நிலையானது அல்ல

(அ). 15(4) என்ற சட்டப்பிரிவினை - முதலாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தபோது அன்றைய பிரதமர் நேருவும், சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கரும்தான்

அரசமைப்புச் சட்டத்தில் (மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு செய்ய உதவிடும் வகையில்) புகுத்தினர். பிற்படுத்தப்பட்டவர்களை அடையாளம் காண 'Socially and Educationally' (சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும்) பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர்.

(ஆ) பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இன்னும் கதவே திறக்கவில்லையே; இதில் பிற்படுத்தப்பட்டவரில் உள்ள மேல் தட்டினரே எல்லாவற்றையும் அபகரிக்கின்றனர் என்ற மாய்மாலக் கூச்சல், பொய் அழுகைக்கு ஆதாரம் துளியும் கிடையாதே! பின் 'கிரீமிலேயர்' புகுத்தலுக்கு என்ன அவசியம்?

(இ) வாதத்திற்காக கிரீமிலேயர் உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் அதுபற்றிய கோரிக்கை கூப்பாடு யாரிடமிருந்து கிளம்பியிருக்க வேண்டும்? பிற்படுத்தப்பட்டவர்களிடமிருந்து தானே! முன்னேறிய ஜாதியினருக்கு - இடஒதுக்கீடை ஒழிக்க முயல்பவர்களுக்கு இதில் என்ன தனி அக்கறை?

27 விழுக்காட்டில் காலியாக உள்ள இடங்களைத் தாங்களே அபகரிக்கத்தானே இச்சூழ்ச்சி!

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இது புரியாதா?

(ஈ) அய்.அய்.டி., அய்.அய்.எம்.எஸ்., போன்றவற்றில் சம்பளம் கட்டணம் பல ஆயிரம், லட்சக்கணக்கில்; அதை பிற்படுத்தப்பட்டவர்களில் வசதி படைத்தோர்தானே கட்டி சேர முடியும்? அப்படி வசதி படைத்தவர்களை வெளியே தள்ளிவிட்டு, வசதி இல்லாதவன் பிள்ளைகளை சேரச் சொன்னால், அவன் தனது இயலாமையால் ஒதுங்கிக் கொள்ளும் பரிதாப நிலையும் உண்டே!

இது ஒரு சூழ்ச்சி வலைப் பின்னல்தானே!

■

**கேள்வி: இடஒதுக்கீட்டு விஷயத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் போறுத்தவரை அதற்கான சலுகைகள் மூலம் முன்னேறியவர்களை 'கிரீமிலேயர்' என்று ஒதுக்கி விடுகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் அப்படி முன்னேறி உயர் பதவிகளை அடைந்தவர்களை கிரீமிலேயர் என்று ஒதுக்குவதில்லை. இதனால் அந்தப் பிரிவில் உள்ள ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மீண்டும் முன்னேறிய குடும்பத்திற்கே கிடைப்பது என்ன நியாயம்?**

---

**பதில்:** அரசியல் சட்டத்தில் பொருளாதார ரீதியான இடஒதுக்கீடுக்கு எங்குமே இடமே தரப்படவில்லை. ஜாதி ரீதியான இடஒதுக்கீட்டுக்கு மட்டும்தான் இடமுள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரைசெயல்பாட்டினாலும் பிரதமர் நரசிம்மராவ் அவர்களால் அப்படி ஒரு ஆணை போடப்பட்டபோது அதை உச்ச நீதிமன்றம் ஏற்காமல் போனதற்குக் காரணம் அதுதான்.

தந்தை பெரியார் ஆரம்பத்தில் அனைவருக்கும் அனைத்தும் என்ற கொள்கையைத்தான் வலியுறுத்தினார். அது நடைமுறை சாத்தியமாகி இருந்தால் இன்று எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. இந்தக் கிரீமிலேயர் விஷயத்தை எடுத்துக் கொண்டால், பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும்தான் அமல் செய்யப்பட்டது. ஓ.சி.க்கும் கிடையாது. எஸ்.சி., எஸ்.டி.க்கும் கிடையாது. இடையில் இருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டுமே கொண்டு வரப்பட்டது. அதனால் நாங்களும் அதை எதிர்த்தோம். எம்.ஜி.ஆர். காலத்தில் 9 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு எல்லைக்கோடு கொண்டு வரப்பட்டபோதும் அதை நாங்கள் எதிர்த்தோம். இதை அரசாங்கம் முடிவு செய்யக்கூடாது.

பாதிப்பு நிகழ்ந்தால் சம்பந்தப்பட்ட வகுப்பினரே போராட முன்வருவார்கள். எங்களுக்கான சலுகைகளையெல்லாம் எங்கள் வகுப்பில் முன்னேறிய குடும்பங்களே பெற்றுக் கொள்கின்றனர் என்று குரல் கொடுப்பார்கள். அப்போது அதை பார்த்துக் கொள்ளலாம். இடஒதுக்கீடு அறிமுகம் செய்யப்படும்போதே

அதில் எல்லை நிர்ணயிக்க மத்திய அரசு முனைந்தது. எனவேதான் எதிர்த்தோம். கிரீமிலேயர் என்பது பொருளாதார அடிப்படையில் கொண்டு வரப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு இந்த ஆண்டு ஒரு வருமானம் இருக்கலாம்; அடுத்த ஆண்டு அது குறையலாம். எனவே அதை அடிப்படையாக வைக்கக் கூடாது.

■

## **கேள்வி:** இட ஒதுக்கீட்டிற்கு ஒரு சட்டப்பூர்வமான பாதுகாப்பு கிடைத்து விட்டது. ஆனால், இடஒதுக்கீட்டின் பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா?

---

**பதில்:** உங்களுடைய கேள்வியே சரியான கேள்வி இல்லை. காரணம், இடஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டம் அல்ல. வறுமை ஒழிப்புக்கு அது பயன்படுகிறது என்பது வேறு. ஆனால், அதன் நோக்கத்தை வைத்துப் பார்க்கும்போது, சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் காலங்காலமாக மறுக்கப்பட்டு வந்த உரிமைகள் - கல்வி உரிமை, கல்வி உரிமை பெறுவதன்மூலமாக வேலை வாய்ப்பு உரிமை, எல்லாவற்றையும்விட சமுதாயத்தில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எந்த வகையிலும் தகுதி குறைந்தவன் அல்ல என்ற நிலை ஏற்புடையதாகயில்லை என்பது தான் இடஒதுக்கீட்டின் தத்துவம்.

நமது அரசியல் சட்டத்திலேயே To Secure all Citizens, Social, Economic & Political Justice என்று மூன்று இருக்கிறது. எனவே, Political Justice, Social Justice, Economic Justice என்ற இந்த மூன்றுக்கும் தெளிவான பொருள் இருக்கிறது. மூன்று நீதிகளும் தனித்தனியானவை என்பது இதன்மூலம் விளங்குகிறது அல்லவா இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது, அதுவும், சட்ட ரீதியாகப் பயன்படுத்தும்போது ஒவ்வொன்றுக்கும் தனியான பொருள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் சட்டத்தில் அதைப்பயன்படுத்தமாட்டான். எனவே, இடஒதுக்கீட்டின் நோக்கம் வறுமை ஒழிப்பு அல்ல. ஏழைகளுக்குப் பயன்பட்டிருக்கிறதா என்றால் ஏழைகள் அதனால் பயன்பெறணும். பயன் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இடஒதுக்கீடு ஏழ்மை ஒழிப்புத் திட்டம் அல்ல. சமூகநீதி பாதுகாப்புக்கானது.

■

## கேள்வி: இட ஒதுக்கீடு இத்தனை சதவிகிதம்தான் இருக்கவேண்டும் என்று நீதிமன்றங்கள் நிர்ணயிக்கலாமா? அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறதா?

**பதில்:** அப்படி நிர்ணயிக்க உச்சநீதிமன்றம் உள்பட எந்த நீதிமன்றத்திற்கும் உரிமை இல்லை; என்றாலும் நீதிமன்றங்கள் அப்படி செய்கின்றன. மக்கள் மன்றமாகிய சட்டமன்றங்களின் உரிமை அது.

இந்திய அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவிலும் அப்படி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் செல்லக்கூடாது என்று உச்சவரம்பு கட்டி, விதியே இல்லை. மண்டல் வழக்கில் வாதாடிய பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி - 100 சதவீத இட ஒதுக்கீடு செய்யவும் அரசுக்கு உரிமை உண்டு. அது அந்த மக்கள் நிலையைப் பொறுத்தது என்று வாதாடினார்!

**வசந்த்குமார்** என்பவர் வழக்கு (Vasantha kumar Vs State of Karanataka)கர்நாடகத்தில் வந்தபோது, அதைப்பற்றி கருத்துக் கூறிய நீதிபதிகளில் ஒருவரான (உச்சநீதிமன்றத்தில்) **ஜஸ்டிஸ் திரு, சின்னப்பரெட்டி** அவர்கள், இட ஒதுக்கீட்டின் அளவை நிர்ணயிப்பது நீதிபதிகளின் வேலை அல்ல. மக்கள் பிரதிநிதிகளின் உரிமை என்றார். “The percentage of reservations is not a matter upon which a court may pronounce with no material at hand. For a court to say that reservation should not exceed 40%, 50% or 60% would be arbitrary and the Constitution does not permit us (Judges) to arbitrary” என்று தெளிவாகக் கூறியுள்ளார் எனவே, இட ஒதுக்கீட்டின் அளவை நீதிமன்றங்கள் நிர்ணயிக்க சட்டத்தில் இடம் அறவே இல்லை!

■

**கேள்வி:** இடஒதுக்கீடு தற்காலிகமானது என்றுதான் அரசியல் சட்டம் கூறுகிறது. எந்தக் காலக் கட்டத்தில் அது முடிவுக்கு வரும்?

---

**பதில்:** இடஒதுக்கீடு நிரந்தரமானது என்று நாங்களும் கூறவில்லை. ஜாதி ஒழிப்பு என்பது கட்டடப்பட்டு வரும் பாலம். அது கட்டி முடிக்கப்படும் வரை அருகாமையில் அமைக்கப்படும் தற்காலிக மாற்றுச் சாலைதான் இடஒதுக்கீடு என்றார் பெரியார். அதுதான் எங்கள் நிலைப்பாடும். இடஒதுக்கீடு வந்து இன்னும் நூறாண்டு கூட ஆகவில்லை. கடந்த இரண்டு, மூன்று தலைமுறைகளாகத்தான் எல்லோரும் படிக்க ஆரம்பித்துள்ளனர். எல்லோரும் வேலைக்கு வரத் துவங்கியுள்ளனர். அரசியல் சட்டத்தின் இது குறித்த பிரிவில் ADEQUATE என்ற லத்தீன் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு, “போதுமான சமத்துவம் வரும் வரை” என்று பொருள்.எனவே, போதுமான சமத்துவம் வரும் வரை இடஒதுக்கீடு தொடரத்தான் வேண்டும்.

■

## கேள்வி: பொருளாதார அடிப்படையில் தமிழகத்தில் கல்வி, வேலை வாய்ப்புகளுக்கு இட ஒதுக்கீடு செய்வதைக் தங்களது கழகம் ஏற்க மறுப்பது ஏன் ?

---

**பதில்:** ‘இடஒதுக்கீடு’ என்பது தந்தை பெரியார் போராடிப் பெற்றுத் தந்த ஓர் உரிமையின் அடிப்படையாகும். இந்திய அரசியல் சட்டத்தின் திருத்தமே (15(4) பிரிவு) தந்தை பெரியாரால்தான் உருவாக்கப்பட்டது. அதில் Socially and Educationaly Backward Classes என்று தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது “**சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும்**” என்று மட்டுமே தெளிவாக ஆக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார ரீதியாக (Economically) என்பது அரசியல் சட்டத்திலே அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்ல! அதற்குக் காரணம் உண்டு.

இப்படி அரசியல் சட்டம் சொல்வதாலே மட்டும் நாங்கள் இதைச் சொல்கிறோம் என்று எண்ண வேண்டிய அவசியமில்லை. காரணம் இந்த நாட்டிலே ஜாதியும் ஜாதியின் அடிப்படையிலே மிகப் பெரும்பாலான மக்களின் கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, அதனால் உத்தியோகமும் பெற முடியாத சூழ்நிலை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வந்துள்ளது. எனவே, மூலாதாரம் என்னவோ அங்கு சென்று அதற்காக அந்த வேரை வெட்டுவது போல இவர்கள் ஆய்ந்துதான் அந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எக்னாமிக்கலி (Economically) என்ற வார்த்தையைப் போட வேண்டுமென்று அப்போது நாடாளுமன்றத்தில் பலர் விவாதித்தபோது ‘அது கூடாது’ என்று பண்டிதநேரு அவர்களே மறுத்துக் கூறி, அதற்குப் பிறகுதான் “சோஷியலி அண்ட் எஜூகேஷனலி” என்ற சொல் போடப்பட்டது. அதற்குக் காரணம் உண்டு. பொருளாதார அடிப்படை என்று வந்தால் அது ஒரு தெளிவான அடிப்படையை உருவாக்க முடியாது!

நீண்டநெடுங்காலமாகஇருந்தசரித்திரக்காரணம்என்னவென்றால், அவன் கீழ்ஜாதி என்கிற காரணத்தினால்தான் அவனுக்குப் படிப்பு மறுக்கப்பட்டது. இதனை **ஏகலைவன்** உதாரணத்திலிருந்து நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ‘படித்த சூத்திரன், குளித்த குதிரை, மதம் பிடித்த யானை – இந்த மூன்றும் ஆபத்துக்குரியது’

என்பது சாத்திரமாகும். ஆகவே, அடிப்படைக் காரணம் என்பது சமூக ரீதியாகக் கல்வி மறுக்கப்பட்ட காரணமாகும்.

பொருளாதார அளவுகோலை ஒரு சரியான அளவுகோலாகக் கொள்ள முடியாது; காரணம், இந்த ஆண்டு பத்தாயிரம் ரூபாய் வருமானமுள்ளவர் அடுத்த ஆண்டு மாற்றி அதைச் சொல்ல முடியும். அதன் காரணமாகத்தான் வருமான வரியின் வரம்பே கூட ஆண்டுக்காண்டு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; மாற்றப்படுகிறது.

அது மட்டுமல்லாமல், நிரந்தரமான வருவாயுள்ளவர்கள் இதிலே ஏமாற்ற முடியாது என்றாலும், திட்டவட்டமான வருவாய் இல்லாதவர்கள் அதைப் பொய் வருவாயாக ஆகக்கூடக் கொடுக்க முடியும். ஆனால், ஜாதி அடிப்படையிலே அப்படி அவர்கள் மாற்றிக்கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல. இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்கிறேன்– ஒரு ரூபாய்க்கு லாட்டரிச்சீட்டு வாங்குகிற கீழ்ஜாதிக்காரருக்கு லட்ச ரூபாய்க்குப் பரிசு விழுந்தால் – தான் படிக்காத காரணத்தால், தன் மகனை டாக்டருக்கோ அல்லது இன்சினீயருக்கோ படிக்க வைக்க அவர் விரும்பினால், அவருக்கு, தானே அந்தத் தகுதி வந்து விடுவதில்லை. பொருளாதாரத்தில் அவரது ஏழ்மை என்பது குறைந்துவிட்டது. ஆனால், அந்தப் பணமிருந்து ஏற்கெனவே காலங்காலமாகப் படித்து வந்திருக்கிற சமுதாயக்காரர்களுடைய பையனோடு இந்தப் பையனும் போய் போட்டியிடும்போது, நிச்சயமாக இந்தப் பையன் அதிலே வெற்றி பெற முடியாது! இந்த நாட்டில் எதன் காரணமாக அவர்கள் பிற்படுத்தப்பட்டார்களோ அதே கல்வி மற்றும் சமூக அடிப்படையில் இடஒதுக்கீட்டை வைத்து அவர்களை நாம் மேலே கொண்டு வருகிறோம் என்பதுதான் இதன் பொருள்.

■

**கேள்வி: கல்வியில் சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்னிலையில் இருப்பவர்கள் இட ஒதுக்கீடு தருவது நியாயம் என்றாலும், வேலை வாய்ப்பு என்று வரும்போது பொருளாதார அளவுகோலே இருக்க வேண்டும் என்பது சரியா ?**

---

**பதில்:** இது ஒரு தவறான வாதம் ஆகும். அப்படி வந்தால் நிலைத்த வருமானம் உள்ளவர்கள் மட்டும்தான் பாதிக்கப்படுவார்கள். எடுத்துக்காட்டாக, அரசு ஊழியர்களுக்கு நிரந்தர வருமானம் (Fixed income of guarantesse) என்பதால் அவர்கள் பிள்ளைகள் அடிபடுவர்; வாய்ப்பு இழப்பர். ஆனால், வியாபாரிகள், நிலக்கிழார் மற்றும் வருமானத்தை மாற்றிக்காட்ட வாய்ப்புடையோர் பிள்ளைகளுக்கு அது முற்றிலும் லாபமாகிவிடும்! அதோடு, இட ஒதுக்கீட்டுக்கு பொருளாதார அடிப்படை என்பது அரசியல் சட்டத்தால் இல்லை என்பதை வி.பி.சிங் அரசு போட்ட 27 சதவீத இட ஒதுக்கீடு ஆணைமீது தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம் தெளிவாகச் சுட்டிக்காட்டி உள்ளது என்பதும் முக்கியமாக கோடிட்டுக் காட்டப்பட வேண்டும்.

■

## **கேள்வி:** ஜெயலலிதா, எந்தச் சமூகநீதியைக் காப்பாற்றியதற்காக அவருக்கு சமூகநீதி காத்த வீராங்கனை பட்டம் கொடுத்தீர்கள் ?

---

**பதில்:** இடஒதுக்கீட்டுக்கு சமூகநீதி என்று பெயர் உண்டு. அதைச் சுட்டிக்காட்டித்தான் அந்தப் பட்டம் தரப்பட்டது!

மண்டல் கமிஷன் வழக்கில் ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற பெஞ்ச் தீர்ப்பு அளித்தது. அதில், 'பொதுவாக 50 சதவிகிதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு செல்லக் கூடாது' என்று எழுதப்பட்டிருந்தது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு 50+18+1=69 சதவிகிதம் என்று இருந்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் தமிழ்நாட்டின் சமூகநீதிக்கு ஆபத்து ஏற்பட்டது. அப்போது திராவிடர் கழகம் ஒரு யோசனையை முன்வைத்தது- 'இந்திய அரசியல் சட்டத்தின், 31சி பிரிவின்படி தனிச் சட்டம் கொண்டு நிறைவேற்றி, ஒன்பதாவது அட்டவணைப் பாதுகாப்போடு, அரசியல் சட்டத் திருத்தம் தேவை. அப்படிச் செய்தால், தமிழகத்தில் சமூகநீதி காக்கப்படும். அதைச் செய்ய மாநில, மத்திய அரசுகள் முன்வர வேண்டும் என்று சொன்னோம். இந்த யோசனையைக் கேட்டு, அதற்கு என்று தனிச் சட்டத்தை ஒருமனதாக சட்டமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றி, **பிரதமர் நரசிம்மராவையும்** ஒரு குழுவுடன் சென்று சந்தித்து, உடனே ஒப்புதல் அளிக்க வற்புறுத்தினார்' அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா. இந்தச் சட்டத்தை நாடாளுமன்றம் ஏற்கச் செய்த பிறகு, **குடியரசு தலைவர் சங்கர் தயாள் சர்மா ஒப்புதலும்** பெறப்பட்டு, இந்தியாவிலேயே **69சதவிகிதம் இட ஒதுக்கீடு சட்டரீதியாக அமலில் உள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை நிறுவினார்.** அந்தச் சமூகநீதி சிந்தனை மற்றும் செயல்பாட்டைப் பாராட்டியே 'சமூகநீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை அவருக்குத் தந்தோம்.

1989ல் பெண்களுக்கு சொத்துரிமை ஆணை பிறப்பித்தபோது திராவிடர் கழகம் முதல் அமைச்சர் கலைஞருக்கு 'மகளிர் உரிமை காத்த மாண்பாளர்' என்ற பட்டத்தை வழங்கினோம்.

யார் நல்லது செய்தாலும் அவர்களை மனம் திறந்து பாராட்டுவது கழகத்தின் பண்பு. பாராட்ட வேண்டியதைப் பாராட்டினால்தான், நமது எதிர்ப்புக்கு ஒரு மதிப்பும் நல்விளைவும் ஏற்படும்! ■

**கேள்வி: முன்பு கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு மறுக்கப் பட்டதற்கு ஜாதி ஒரு காரணமாக இருந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக 30, 40 ஆண்டுகளாக இப்படி மறுக்கப்படுவதற்குப் பொருளாதாரமும் ஒரு காரணமாக இருக்கிறது. ஒருவர் ஏழையாக இருப்பதால் அவனுக்குக் கல்வி கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதனால், அவன் வளர்ச்சி பெறமுடியாத சூழல் இருக்கிறது. எனவே, எப்படி ஜாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு தேவைப்படுகிறதோ, அதே மாதிரி பொருளாதார அடிப்படையிலும், இட ஒதுக்கீடு தேவை என்பதற்கான நியாயங்கள் இருக்கிறதல்லவா?**

---

**பதில்:** இடஒதுக்கீட்டில் பொருளாதார அம்சத்தைக் கொண்டு வந்து குழப்பக்கூடாது என்பதில் திராவிடர் கழகம் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக, திட்டவட்டமாக இருக்கிறது. மனு தர்மத்தில் இருந்து மண்டல் கமிஷன்வரை எடுத்துக்கொண்டால், ஏழ்மைக்கே கூட காரணம் ஜாதி. மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறவர்களுக்கு இது தெரியாது. இப்படி Poverty is result of Caste என்று மண்டல் கமிஷன் சொல்லுகிறது. ஏழ்மைக்குக் காரணம் ஜாதி என்பதைவிட, அதனுடைய விளைவு என்கிற அளவில் இருக்கிறது. பிறவி பேதம் என்பது பொருளாதார பேதத்தில் மிக ஆழமான பேதம். காரணம் பொருளாதார பேதத்தில் ஏழை பணக்காரனாக மாறலாம். பணக்காரன் ஏழையாக மாறலாம்; ஆனால், பிறவி பேதம் என்கிற ஜாதி பேதத்தில் என்னதான் ஒருத்தன் படித்தாலும், உயர்ந்தாலும் அவனுடைய பிறவி அந்தஸ்து சுடுகாடு மட்டும் போகிறது.

பொருளாதாரத்தினால் பேதம் இருக்கிறது என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை நான் மறுக்கவில்லை. அதை மாற்ற தனித் திட்டமாக்க வேண்டுமே தவிர, இதிலே கொண்டுவந்து போடக்கூடாது. மண்டல் கமிஷனை அமல்படுத்த வேண்டும் என்று திராவிடர் கழகம் திருச்சியில் பத்து ஆண்டுகளுக்குமுன் மாநில மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டிலேயேகூட எல்லா

சமூகத்திலும்ஏழையாகஇருக்கிறவர்களுக்குபத்துசதவிகிதம்தனியாக இட ஒதுக்கீடு செய்யணும்; செய்வதில் எங்களுக்கு மறுப்பில்லை என்று தெளிவாகச் சொல்லி, அதேநேரம் இதில் போட்டு குழப்பக் கூடாது என்று சொல்லி இருக்கிறோம்.

■

## கேள்வி: பிற்படுத்தப்பட்டோருக்கு — கல்வி வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு செய்வதைவிட — பொருளாதார நலத் திட்டங்களை அமல்படுத்துவதே அவர்களை முன்னேறச் செய்யும் என்ற வாதம் சரியா?

---

**பதில்:** பொருளாதார நலத் திட்டங்களால் அவர்கள் பணக்காரர்கள் - வசதி படைத்தவர்கள் ஏழ்மை நிலையிலிருந்து மீண்டவர்கள் என்று ஆவார்கள் என்றாலும்கூட, அதிகாரப் பங்களிப்பில் (Power Sharing) ஈடுபட முடியுமா? முடியாதே!

கல்வி, உத்தியோக இட ஒதுக்கீடு மூலம்தான் அதைப் பெற முடியும்.

பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் ஒருமுறை சொன்னார்: "பீகாரில் 10 மாடு வைத்துள்ள ஒரு யாதவருக்கு 10,000 ரூபாய் மாத வருமானம் வரும். வசதியுடன் வாழ்வார். வெறும் 1000 ரூபாய்க்குள் மாத வருமானம் சம்பாதிக்கும் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நினைத்தால், அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து அவர்முன் மண்டியிடச் செய்துவிடமுடியுமே! அதிகாரம் இதில் யாரை எப்படி உயர்த்துகிறது என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய செய்தியல்லவா?

குலத்தொழில் மாறி, சமூகத்தில் செருப்புத் தைப்பவர் பிள்ளை அய்.பி.எஸ். ஆகவும், துணி வெளுப்பவன் மகன் அய்.ஏ.எஸ். ஆகவும் ஆக இடஒதுக்கீடுதான் வழிவகை செய்யுமே தவிர, வெறும் பொருளாதார நலத்திட்டம் அதனைத் தர முடியாதே."

நீதிபதிகள் பெஞ்ச் அளித்த மண்டல் கமிஷன் தீர்ப்பில் உள்ள ஒரு முக்கியப் பகுதி:

"Poverty is not a necessary criterion of backwardness; it is infact irrelevent. The provision for reservation is really a programme of historical compensation; it is neither a measure of economic reform nor a poverty alleviation programme."

(இதன் தமிழாக்கம்: பிற்படுத்தப்பட்ட தன்மைக்கு வறுமை ஓர் அளவுகோல் அல்ல; உண்மையில் சொல்லப்போனால் - அது பொருத்தமில்லாதது; வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட இழப்பை சரி செய்வதற்கான திட்டம்தான் இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீடு ஒரு பொருளாதார சீர்திருத்தத் திட்டமல்ல; வறுமை ஒழிப்புத் திட்டமும் அல்ல!) ■

**கேள்வி:** கல்வியறிவு, பொருளாதார நிலை உயர, உயர ஜாதி பாகுபாடு குறைகிறது என்பதை ஒப்புக் கொள்வீர்களா?

---

**பதில்:** கல்வி, பொருளாதாரத்தால் மட்டும் ஜாதி ஒழியாது. அதற்கென்ற **சிந்தனைமாறவேண்டும்.** வடநாட்டில் மாவட்ட நீதிபதியாய் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் போகிறார். அவர் நாற்காலி போட்டு அமரக்கூடாது என்று ஒரு கூட்டம் தடை விதிக்கிறது!

பாபு ஜெகஜீவன்ராம் ராணுவ மந்திரியாக இருந்தார். அவர் உத்திரப்பிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சர் சம்பூர்ணானந்த் சிலையை திறக்கப் போனார். அப்போது ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் உயர்ஜாதிக்காரர் சிலையை திறக்கக்கூடாது என்று மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தை நடத்தியது, காசி இந்து பல்கலைக்கழகத்தின் உயர்ஜாதி முதுகலை பட்டதாரி மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள். ஆனால் அவர் சிலையைக் திறந்து வைத்து விட்டார். அவர் சிலையை கட்டித் தழுவி திறக்கவில்லை. வெறும் பொத்தானை அமுக்கித்தான் திறந்து வைத்தார்! ஆனாலும் தீட்டு மின்சாரம் வழியே போயிருக்கும் எனக் கருதி, கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்து அந்தச் சிலையை கழுவினார்கள். ஜெகஜீவன்ராம் ஒரு கோடீஸ்வரர்; படித்த வழக்கறிஞர். அவர் பணத்திற்கோ, படிப்பிற்கோ மரியாதை கிடைக்கவில்லை. படித்தவர்கள், பணக்காரர்களாய் இருந்த மாணவர்கள் ஜாதி சிந்தனையை விட்டு வெளியே வரவில்லை. ஆர்ட்டிகிள் 70-இல் தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்று போடுவதற்குப் பதிலாக, ஜாதி ஒழிக்கப்பட்டு விட்டது என்று போடுங்கள் என்றார் தந்தை பெரியார். **ஜாதியில்லா சிந்தனை மக்கள் மனதில் உருவாக்கப்பட வேண்டும். அதுதான் நிரந்தரத் தீர்வு.**

■

**கேள்வி: ஜாதியே கூடாது என்கிறீர்கள். ஆனால் ஜாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு வேண்டும் என்று ஏன் கூறுகிறீர்கள் ?**

---

**பதில்:** நீதிமன்றம் கேட்கிறதே? 69 சதவீத இடஒதுக்கீடு கொடுத்தால், என்ன அடிப்படையில் 69 சதவீதம் ஒதுக்குகிறீர்கள்? கணக்கெடுத்தீர்களா என்று நீதிமன்றம் கேட்கிறதே? எனவேதான் ஜாதிரீதியாக கணக்கெடுப்பு கேட்கிறோம். அம்மைக் கிருமியை உள்ளே அனுப்பி அம்மை நோயை குணப்படுத்துகிற மாதிரிதான் இது. ஜாதி ஒழியும் வரை ஜாதி ரீதியான இடஒதுக்கீடு அவசியம்.

■

## கேள்வி: ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறுவோர் — ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்கலாமா?

**பதில்:** ஜாதி தர்மம் காரணமாகத்தான் மிகப் பெரும்பாலான மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும், ஒடுக்கப்பட்ட - உரிமை பறிக்கப்பட்ட மக்களாகவும் ஆக்கப்பட்டார்கள். கல்வி என்பது உயர்ஜாதியினருக்கு மட்டுமே உள்ள உரிமை என்ற ஜாதி தர்மத்தினைத்தான் பழைய மன்னராட்சிகளும் பாதுகாத்தன. அந்த நஞ்சு காரணமாகத்தான் படிக்காமலும், படிக்காததினால் வெறும் உடலுழைப்புச் சமுதாயமாகவும் பெரும்பாலான மக்கள் ஆக்கப்பட்டார்கள். அம்மை நோயை ஒழிக்க அம்மை கிருமிகளை உள்ளே செலுத்தி, உடலுக்கு அம்மை வராமல் தடுப்பதுபோலத்தான் இதுவும்! (மருந்துகளில் விஷம் (Poison) என்று போடப்பட்டிருப்பதையும் பார்த்திருப்பீர்களே). சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் என்ற அரசியல் சட்ட வாசகங்களுக்கு ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வதே அளவுகோல் ஆகும். ஜாதியை ஒழிக்க வேண்டுமானால், ஜாதிதர்மம் ஒழிய வேண்டும். அனைத்து மக்களும் படிப்பும், உத்தியோகமும் பெற்று மற்ற முன்னேறிய ஜாதியினருக்கு சமமாக வந்தாலே ஜாதியின் அடித்தளம் உடைந்து கட்டடம் தானே விழும்.

எந்த ஜாதி காரணமாக இந்த மக்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டனவோ, அதையே கருவியாகக் கொண்டு இவர்களை முன்னேற்றுவது, ‘முள்ளை முள்ளால் எடுக்கும் முறையை ஒக்கும்’ என்கிறார் மண்டல், அவரது அறிக்கையில். எனவேதான், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, கல்வி வள்ளல் காமராசர், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் உள்ளிட்ட பலரும் இதனைஆதரிக்கிறார்கள்.

■

## கேள்வி: இட ஒதுக்கீட்டினால் 'தகுதி – திறமை' போய்விடுகிறது என்பது சரியா?

**பதில்:** இது ஒரு மோசடிக் கருத்து பார்ப்பன விஷ(ம)த்தின் வெளிப்பாடு ஆகும். குறைந்தபட்சத் தகுதி, யோக்கியதாம்சம் இல்லாதவர்களையும், அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதற்காக தேர்வு செய்யுங்கள் என்பதல்ல இட ஒதுக்கீடு.

எடுத்துக்காட்டாக, தொழிற்கல்லூரிகளில் மனு போடும் தாழ்த்தப்பட்டவர்களும், தேர்வில் வெற்றிபெற்றவர்கள்தானே. பிற்படுத்தப்பட்டோர் என்றாலும் 60 சதவீதம் மார்க் வாங்கினால் மட்டும் தானே மனு போடமுடியும்? 60 சதவீதம் என்பது முதல் கிளாஸ் மார்க்(FIRST CLASS) ஆகும். தேர்வு செய்யப்படுபவர்கள் அதற்கு மேல் மார்க் வாங்கியவர்கள் மட்டுமே. இது எப்படி, தகுதி, குறைவு ஆகும்? அதுபோலவே வேலை வாய்ப்புகளுக்கு ஃபெயில் ஆனவர்களையா தேர்வு செய்யச் சொல்கிறோம்? இல்லையே! பின் எப்படி தகுதி, 'திறமை' போய்விடும்?

இந்திய அரசின் நிர்வாக அதிகாரிகள் எல்லாம் தகுதி, திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்கள்தானே? எதில் இவர்கள் திறமையாகவும், நாணயமாகவும் இருந்தனர்? இருக்கின்றனர்?

ராணுவ ரகசியத்தை வெளிநாட்டுக்கு விஸ்கி பாட்டிலுக்கு விற்றதிலிருந்து, பல ஆயிரம் கோடி அர்ஷத் மேத்தாவின் ஊழல் வரை செய்தது யார்? 'தகுதி, திறமை' 'அக்மார்க்' முத்திரை பெற்ற உயர்ஜாதியினர்தானே?

'தகுதி, திறமை' என்பதற்கு இதுதான் அடையாளம் என்றால், அந்தத் தகுதி திறமை ஒடுக்கப்பட்டவர்களுக்கு இருக்காதுதான்!

கல்வி வள்ளல் காமராசர் ஆணித்தரமாகக் கேட்டார்: 'பறையன்' டாக்டராகி ஊசி போட்டதால் எவன் செத்துப்போனான்? பறையனை எஞ்சீனியராக்கினேன்; அவன் பாலம் கட்டினான். எந்தப் பாலம் இடிந்துவிட்டது? என்ன தகுதி திறமை? உன் தகுதியும் தெரியும் உனக்குச் சொல்லிக் கொடுத்தவன் தகுதியும் எனக்குத் தெரியும்? என்றாரே அதை மறுக்க முடியுமா?

**கேள்வி:** பிற்படுத்தப்பட்டோரிலேயே — ஒரு குறிப்பிட்ட பிரிவினரே இடஒதுக்கீட்டின் முழு பயனையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சரியா ?

---

**பதில்:** இதைவிட பித்தலாட்டமானதொரு வாதம் - ஆதாரமற்ற தகவல் வேறொன்றும் இருக்கவே முடியாது. இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, மத்திய அரசில் கல்வி, வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்க்கு 1993 ஆம் ஆண்டு வரை எதுவும் கிடையாது. 1994 முதல் மெதுவாக தொடங்கியுள்ள மத்திய அரசு இட ஒதுக்கீட்டில் கூட, இன்னமும் கல்வி வாய்ப்புகளில் இட ஒதுக்கீடே இல்லை.

மாநிலங்களைப் பொறுத்தவரை தென்னக மாநிலங்களில் 20, 30 ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவிலேயே இட ஒதுக்கீடு உள்ளது. சில வட மாநிலங்களில் கடந்த சில ஆண்டுகளாகத்தான் இட ஒதுக்கீடு அமலில் உள்ளது. இந்நிலையில் எதை வைத்து ‘மேல் தட்டு வர்க்கத்தினர்’ குறிப்பிட்ட ஒரு சாராரே அனுபவித்து வருகின்றனர் என்று கூறுகின்றனர்?

பார்ப்பனர்கள், வேதம், மனுகாலந்தொட்டே இட ஒதுக்கீட்டை (கல்வி) அவர்களே தொடங்கி, அனுபவித்து வருகிறார்களே, அதுபற்றி மூச்சு விடாமல் உண்மைகளை இப்படி புரட்டிக் கூறுவது எவ்வகையில் நியாயம்? தலைமுறை தலைமுறையாகக் கல்வி உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு என்ற சாஸ்திர, சட்ட, நடைமுறைகளைப்பற்றி கவலைப்படாதவர்களே, ஒன்றிரண்டு தலைமுறையாக பிற்படுத்தப்பட்டோரில் படித்தவர்களாக முன்னேறிவருவது கண்டு வயிறு எரிகிறார்கள். மூன்று தலைமுறையினர் படித்தவர்களாக தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோரில், தாழ்த்தப்பட்டோரில், மலைவாழ் மக்களில் இருப்பதே அபூர்வமாயிற்றே! ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதால் அதற்குப் பொருள் என்ன? இந்தக் குரல் - நியாயப்படி பிற்படுத்தப்பட்டோரிடம் இருந்து அல்லவா கிளம்ப வேண்டும்? ஆனால், அதற்கு மாறாக உயர்ஜாதி வர்க்கத்தினராகிய இட ஒதுக்கீடு எதிர்ப்பாளர்களிடமிருந்து அல்லவா கிளம்புகிறது? அதன் சூட்சமம்

அதன் பின்னால் புதைந்துள்ள சூழ்ச்சி இப்போது புரிகிறதா? இது பிற்படுத்தப்பட்டோரை பிரித்தாண்டு கலகம் மூட்டும், சிண்டு முடியும் நரித்தனம் அல்லாது வேறு என்ன? இன்னும் பல ஆண்டுகள் இட ஒதுக்கீடு - சமூகநீதி சரியாக அமலான பிறகு அல்லவா இதுபற்றி ஒரு புதிய பார்வையுடன், மறு ஆய்வின்போது இப்பிரச்சினை எழமுடியும்?

■

## **கேள்வி:** வேலையில் சேருவதற்கு இட ஒதுக்கீடு கேட்பது சரி; பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு கோருவது சரியா ?

---

**பதில்:** வேலையில் சேர்வதுடன் இணைந்ததேதான் பதவி உயர்வு என்பதும்; நீதிமன்றத் தீர்ப்புகளும் - இதையே கூறுகின்றன. Appointement includes promotion also என்பதாகும்.

சில பதவிகள் - ரோஸ்டர் முறையில் - பதவி உயர்வுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையும் வேலைவாய்ப்பில் உண்டு என்பது மற்றொரு காரணம்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஒன்றுமில்லாமல் கிடந்த சமூகங்கள் - சில ஆண்டுக்காலத்தில் பதவி உயர்வு பெறுவது சமூகநீதிதானே தவிர, அநீதி அல்ல.

முன்னே வந்தவனுக்கு மனம் நோகாதா? சலிப்பு ஏற்படாதா? என்று கேட்கப்படுகிறது. செலக்ஷன் கிரேடு - கெசட்டட் பதவிகளுக்கு தேர்வு மூலமே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சீனியாரிட்டி - பதவி முதிர்ச்சி பார்ப்பதில்லை. அப்படி நியமனம் நடைபெறுகையில் நோகாதவர்கள் மனம், ஒடுக்கப்பட்ட மக்கள் ஒரு சில இடங்களில் பதவி உயர்வு பெறும் போது மட்டும் துடிப்பது ஏன்? இதில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பே தவறானது. இதைத் தவிர்க்க அரசியல் சட்டத்திருத்தம் வருவது அவசியமும் அவசரமும் ஆகும்.

■

**கேள்வி:** மூன்று தலைமுறைக்கு மேல் படித்த குடும்பங்களுக்கு இட ஒதுக்கீடு சலுகை தொடர்ந்து தரப்பட வேண்டுமா ?

---

**பதில்:** எதுவரை படித்தவர்? சரியான அளவுகோல் தேவை அல்லவா? எல்லோரும் படிக்க வற்புறுத்துவதே முதல் வேலையாக இருக்க வேண்டும். அப்படி ஒரு அளவுகோல் வந்தால் எல்லோருக்கும் வருவதை (முன்னேறியவர்கள் உள்பட) நாடு ஏற்க வேண்டும். அதுதான் சரியான அணுகுமுறையாக இருக்க வேண்டும். இன்னும் கேட்டால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் படிப்பு வாசனையே இல்லாதவர்கள் மூன்று தலைமுறையில் நிறுத்த வேண்டும் என்றால், பரம்பரையாக படிப்பை தங்கள் ஏகபோக உடமையாக்கியவர்களுக்கு எப்படி உச்சவரம்பு இதில் இருக்க வேண்டும் என்பதையும் சிந்திக்க வேண்டாமா?

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' போல எல்லார்க்கும் எல்லாமும் பொதுவான நியதியாக வேண்டாமா?

■

## கேள்வி : தமிழ்நாட்டில் சமூகநீதிக்கு எதிரான நுழைவுத்தேர்வு நுழையும் ஆபத்து உள்ளதா?

---

**பதில் :** மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி - 1976 நெருக்கடி நிலை காலத்தில் பொதுப் பட்டியலுக்கு எடுத்துச் சென்றாலும் சென்றனர். அன்று தொட்டுக் கல்வித் துறையில் பார்ப்பனீயம் தன் சித்து வேலைகளில் இறங்கி விட்டது. குறிப்பாக நுழைவுத் தேர்வு என்ற பாம்பு தலை தூக்குவதும், அதனை எதிர்த்து சமூக நீதியாளர்கள் தடியைத் தூக்கினால் பொந்தில் நுழைந்து கொள்வது என்பதும் வாடிக்கையாகி விட்டது.

மருத்துவக் கல்விக்கான நுழைவுத்தேர்வு 1984ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் திணிக்கப்பட்டது. அன்று முதல் திராவிடர் கழகம்தான் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது. அதன்பிறகு நுழைவுத் தேர்வு மூலமே தொழிற் கல்வி படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நடந்து வந்தது. இந்த நிலையில், 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது நுழைவுத்தேர்வை நீக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. 2007ஆம் ஆண்டில் இருந்து நுழைவுத் தேர்வு ரத்துசெய்யப்பட்டு பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மட்டும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

மருத்துவப் படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் அகில இந்திய மருத்துவ நுழைவுத்தேர்வு, ஜிப்மர் நுழைவுத்தேர்வு, அகில இந்திய மருத்துவ நிறுவன (எய்ம்ஸ்) நுழைவுத் தேர்வு என்று ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் சேர தனித்தனி நுழைவுத்தேர்வு எழுதுவது மாணவர்களுக்கு மிகவும் சிரமமாக இருப்பதால், மருத்துவப் படிப்புகளில் சேர நாடு முழுவதும் பொது நுழைவுத் தேர்வு நடத்தலாம் என்று இந்திய மருத்துவ கவுன்சில் (எம்.சி.அய்.) மத்திய சுகாதார அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்தது. எம்.சி.அய். அளித்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டு இந்தியா முழுவதும் பொது நுழைவுத்தேர்வு நடத்த உத்தரவிட்டது மத்திய அரசு.

அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து 115 மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் 2010இல் தாக்கல் செய்யப்பட்டன. இந்த

வழக்கை விசாரித்த நீதிமன்றம் மருத்துவக் கல்வியில் நாடு தழுவிய பொது நுழைவுத்தேர்வு தேவையில்லை என்று தீர்ப்பளித்தது. மூவர் கொண்ட அமர்வில் இரு நீதிபதிகள் நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கினர். (18.7.2013). இந்த தீர்ப்பை எதிர்த்து ஜூலை 2013-ஆம் ஆண்டு எப்.சி.அய். சார்பில் மறு சீராய்வு மனு போடப்பட்டது. 2014-ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்ததும், நாடுமுழுவதும் பொது நுழைவுத்தேர்வு தேவை என்ற நிலையெடுத்து அரசின் சார்பில் 2013-ஆம் ஆண்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து வழக்கும் தொடரப்பட்டது.

மருத்துவக் கல்விக்கான நெறிமுறைகளை வகுப்பது தவிர நுழைவுத் தேர்வை நடத்திட உத்தரவிடும் சட்டப்படியான அதிகாரம் இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு (எம்.சி.அய்.) கிடையாது என்று உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் அறுதியிட்டுக் கூறியது. (18.7.2013)

நீதிபதிகள் அல்டம்ஸ் கபீர், விக்கிர மஜித்சிங் ஆகிய இருவரும் அளித்த அந்த தீர்ப்பில் முக்கியமானதொரு கருத்தைத் தெளிவுபடுத்தியும் இருந்தனர். நுழைவுத் தேர்வு இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று ஆணி அடித்தது போல அறைந்திருந்தனர்.

இவ்வளவுக்குப் பிறகும் மறு சீராய்வு மனு மீதான தீர்ப்பு தலை கீழாக ஆனதுதான் ஆச்சரியம்!

அதே உச்சநீதிமன்றம் முந்தைய தீர்ப்புக்கு மாறாக நுழைவுத் தேர்வை அனுமதித்துள்ளது. வழக்கு முழுமையாக விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு அளிக்கப்படும் வரை பொது நுழைவுத் தேர்வை நடத்திடத் தடையில்லை என்றும் உச்சநீதிமன்றம் நேற்று கூறி இருக்கிறது.

மருத்துவக் கல்விக்கான நெறிமுறைகளை வகுப்பதுதான் மருத்துவக் கவுன்சிலின் வேலையே தவிர நுழைவுத் தேர்வை நடத்தச் சொல்லுவதற்கான சட்டப்படியான அதிகாரம் அதற்குக் கிடையாது என்று எந்த உச்சநீதிமன்ற அமர்வு சொன்னதோ, அதற்கு முரண்பாடாக - மருத்துவக் கவுன்சிலின் மேல் முறையீட்டை ஏற்று நுழைவுத் தேர்வை நடத்திட அதே உச்சநீதிமன்றம் அனுமதித்திருப்பது - அசல் முரண்பாடல்லவா! இப்படியெல்லாம்

தீர்ப்பு சொன்னால் உச்சநீதிமன்றத்தின் மீதான நம்பகத் தன்மை கேள்விக்குறியாகி விடாதா? இது கோடானு கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் பிரச்சினையல்லவா?

இந்தியா முழுமையும் ஒரே மாதிரியான கல்வித் திட்டம் நடைமுறையில் இருக்கிறதா?

சி.பி.எஸ்.இ., மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ இந்தியன் கல்வி, மாநில அரசு என்று பல்வேறு வகையான பாடத் திட்டங்கள் உள்ளனவே! இந்த நிலையில் ஒரே மாதிரியான நுழைவுத் தேர்வு எப்படி சரியானதாக, நியாயமானதாக இருக்க முடியும்?

அகில இந்திய நுழைவுத் தேர்வு என்பது – சி.பி.எஸ்.இ. முறையில் படித்து வந்த மாணவர்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறது. இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்காமல், ஒரு சார்பாக எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் நுழைவுத் தேர்வைத் திணிக்கலாமா? இதனை அனுமதிக்கத்தான் முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சியில் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. ஆனாலும் சரியான முறையில் பின்பற்றப்படாததால் (நாம் தெரிவித்த யோசனையை கேட்கவில்லை) சென்னை உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. பிறகு ஆட்சிக்கு வந்த தி.மு.க, அரசு நிபுணர் குழுவை அமைத்து, அது தந்த பரிந்துரையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டு, வழக்கிலும் வென்றது. தி.மு.க. ஆட்சியில் தனி சட்டமே இயற்றப்பட்டு குடியரசு தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டது. (15.3.2007).

நுழைவுத் தேர்வை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உயர்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட மனுவில் கொடுக்கப் பட்டுள்ள புள்ளி விவரம் அனைத்துத் தரப்பு மக்களின் கண்களையும் திறக்கக் கூடியதாகும். (உச்சநீதிமன்றம் உட்பட).

2004-2005ஆம் ஆண்டில் 5 லட்சத்திற்கும் - அதிகமான மாணவர்கள் பிளஸ் டூ தேர்வை எழுதினார்கள். அதில் 2 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்த வர்கள். இவர்களில் பெரும்பாலோர் அதிக மதிப்பெண்களை எடுத்திருந்தனர். நிறைய மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலும் நுழைந்தனர். பிளஸ் டூ தேர்வும் நுழைவுத் தேர்வைப் போன்றது தான். ஆனால், புதிய நுழைவுத் தேர்வு காரணமாக கடந்த ஆண்டில்

மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் உள்ள 1195 இடங்களில் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைத்த இடங்கள் வெறும் 227தான்; அதனால் தான் நுழைவுத் தேர்வை ரத்து செய்தோம் என்று தி.மு.க. ஆட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்டுதான் சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசின் சட்டத்துக்கு அனுமதி வழங்கியது.

10.1.2010 முதல் 13.1.2010 வரை அய்தராபாத்தில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மருத்துவப் படிப்புக்கு அகில இந்திய அளவில் நுழைவுத் தேர்வு கொண்டு வரப்பட மாட்டாது என்று முடிவு எடுக்கப்பட்டதையும் இந்த நேரத்தில் நினைவூட்டுகிறோம்.

அகில இந்திய நுழைவுத் தேர்வுக்கு இன்னொரு காரணம் முன் வைக்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நடைமுறையில் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு பல நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் எழுத வேண்டியிருப்பதாகவும் அது அவர்களுக்குப் பெரும் சுமையாக இருப்பதாகவும் ஒரு கதையை அளக்கிறார்கள். அதாவது உண்மையா? தேசிய அளவில் ஒரு நுழைவுத் தேர்வை எழுதினாலும், டில்லியில் உள்ள எய்ம்ஸ், சண்டிகரில் உள்ள பி.ஜி.அய்., புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மற்றும் இராணுவ மருத்துவக் கல்லூரிகளுக்குத் தனித் தனியாகத்தான் நுழைவுத் தேர்வை எழுத வேண்டிய நிலை இன்னும் இருக்கிறதே - இதற்கு என்ன பதில்? எந்த வகையில் பார்த்தாலும் தேசிய நுழைவுத் தேர்வு கிராமப்புற, ஏழை, எளிய முதல் தலைமுறையாகப் படிக்க முன்வரும் மாணவர்களின் தலையில் விழுந்த இடிதான் என்பதில் அய்யமில்லை. பார்ப்பனீய சூழ்ச்சி இதன் பின்னணியில் பதுங்கி இருக்கிறது என்பதில் அய்யமில்லை.

நுழைவுத் தேர்வை எழுதுவதற்குத் தேவையான பயிற்சிக் கூடங்கள் கிராமப்புறங்களில் உண்டா? நகரப்புறங்களில் வந்து படிக்க வேண்டுமானால், அதற்காக ஆகும் செலவை சுமக்கும் சக்தி ஏழை, எளிய மக்களுக்கு உண்டா?

அப்படியே பார்த்தாலும் நுழைவுத் தேர்வுதான் தகுதியின் அளவுகோலா? நுழைவுத் தேர்வு தொடர்பான வழக்கில் சென்னை

உயர்நீதிமன்ற நீதிபதிகள் பி.கே. மிஸ்ரா, சம்பத்குமார் ஆகியோர் வழங்கிய தீர்ப்பில் (27.4.2007) அழகாக ஒன்றைச் சொன்னார்களே!

நுழைவுத் தேர்வை நடத்தினாலும் முழு சமநிலை என்பது கட்டுக்கதைதான். ஏனென்றால், சரியான விடையைத் தேர்ந்தெடுப்பதைவிட கோன்பனேகா குரோர்பதி தொலைக்காட்சி நிகழ்ச்சி போல அனுமானத்தின் அடிப்படையில் விடைகளை டிக் செய்யும் வாய்ப்புள்ளது என்று தீர்ப்பிலேயே சுட்டிக் காட்டியுள்ளார்களே - இடித்துச் சொன்னார்களே!

தமிழ்நாட்டைப் பொருத்தவரை இடஒதுக்கீட்டில் முக்கியமான நிலைப்பாடு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வு சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்டது. 69 சதவிகித அடிப்படையில் கல்வி வேலை வாய்ப்பில் இடங்கள் அளிக்கப்படுகின்றன. இதற்கு எதிராக மத்திய அரசு செயல்படும் நிலையை, தற்போதைய உச்சநீதிமன்ற தீர்ப்பு தூண்டி விடவில்லையா?

மாநில அரசின் உரிமைகளில் அத்துமீறி நுழைய மத்திய அரசை அனுமதிக்கலாமா? தந்தை பெரியார் பிறந்த தமிழ் மண்ணில் சமூகநீதிக்கு எதிராக ஒரு சிறு துரும்பை அசைத்தாலும், அது கொந்தளிக்கும் பெருங்கடலாக, சீறி எழும் எரிமலையாகப் பேருரு எடுக்கும் என்பதை மறந்து விடலாமா?

மாநிலங்களில் உள்ள எம்.பி.பி.எஸ். இடங்களில் 15 சதவீதத்தையும் மருத்துவ முதுநிலை பட்டப் பிரிவில் 50 சதவீதத்தையும் பொதுத் தொகுப்புக்கு மத்திய அரசு எடுத்துச் செல்லுகிறது. அப்படி எடுத்துச் செல்லப்படும் இடங்களில் இடஒதுக்கீடுக்கு இடம் இல்லை.

இந்தக் கொடுமை போதாது என்று ஒட்டு மொத்தமாகவே தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் 69 சதவீத இடஒதுக்கீட்டை முழுவதுமாக விழுங்கிக் கபளீகரம் செய்யும் சதி நடக்கிறது! நடக்கிறது!! இதன் பின்னணியை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது - முடியாது. மக்களின் கவனமெல்லாம் தேர்தல் அரசியல் பக்கம் திசை திரும்பி இருக்கும் நேரம் பார்த்து இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு வெளியாகியுள்ளது.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம்

இது. சமூக நீதியாளர்கள் விழித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது. தமிழ்நாடு அரசு உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தி நீதிமன்றம் வழியாக தமிழ்நாட்டின் 69 சதவீத இடஒதுக்கீட்டைக் (9ஆவது அட்டவணையில் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறது) காப்பாற்றிட தேவையான சட்ட ரீதியான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

■

## கேள்வி: அர்ச்சகர் பிரச்சினையில் பார்ப்பனர் அணுகுமுறைக்கும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அவர்களின் அணுகுமுறைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

---

**பதில்:** ஜாதி அடிப்படை பார்க்காது, அதாவது பார்ப்பனர் மட்டும்தான் ‘சாமி’ சிலையைத் தொட்டு வணங்கும் அர்ச்சகராகும் உரிமை பெற முடியும் என்ற நிலைமையை மாற்றி, அனைத்து ஜாதியினரும் அதற்குரிய தகுதி பெற்று அர்ச்சகர் ஆகலாம் என்று தி.மு.க ஆட்சியில் தந்தை பெரியார் கருத்திற்கேற்ப சட்டம் கொண்டுவந்தார் கலைஞர் முதல்வராக இருந்தபோது 1971 இல். அதை எதிர்த்து காஞ்சி சங்கராச்சாரியார், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் மற்றும் சீரங்கம் பார்ப்பனர்கள் எல்லாம் 12 பேர், உச்சநீதி மன்றத்தில் ரிட் போட்டனர். (இராசகோபாலாச்சாரியார் பரிந்துரையில், பல்கிவாலா என்ற வழக்கறிஞர் பணம் வாங்காமலேயே அங்கே இவர்களுக்காக வாதாடினார்). அர்ச்சகர் நியமனத்திற்கு ஜாதி அடிப்படைதான் பார்க்க வேண்டும்; ‘தகுதி’ அடிப்படை பார்க்கக்கூடாது என்பதே பார்ப்பனர்களின் ஒருமித்த வாதம்; ஆனால், இட ஒதுக்கீட்டில் கல்வி, உத்தியோகம் என்பதில் மட்டும் ‘தகுதி’ அடிப்படை பார்க்க வேண்டும்; ஜாதி அடிப்படை பார்க்கக்கூடாது என்பது அவர்களின் வாதம் ஆகும்! பேச நா இரண்டுடையாய் என்பது போற்றி என்ற ஆரிய மாயையின் தன்மையை இதன்மூலம் அறிவுள்ள எவரும் புரிந்துகொள்ள முடியும். எது அவர்களுக்கு சாதகமோ அதனை அப்போது கூறுவதும், பிறகு அது அவர்களுக்குப் பயன்படாது என்றால் மாற்றி, தலைகீழாகப் பேசுவதும் அவாளது தர்மம் ஆகும்.

வேதத்தில், மனுதர்மத்தில் இட ஒதுக்கீட்டினைத் தொடங்கியவர்கள் - பிராமணனுக்குக் கல்வி, க்ஷத்திரியனுக்கு ஆட்சி, வைசியனுக்கு வாணிபம், சூத்திரனுக்கு அடிமைத் தொழில், குற்றேவல் என்று இட ஒதுக்கீட்டினை ரிசர்வேஷனைத் தொடங்கியது முதன்முதலில் ஆரியர்கள் தானே!

■

## கேள்வி: ஜாதியை ஒழிக்கவே முடியாதா ?

---

**பதில்:** ஏன் முடியாது? அரசியல் சட்டத்தின் 17ஆவது பிரிவில் உள்ள "தீண்டாமைக்குப்" பதில் "ஜாதி" ஒழிக்கப்படுகிறது என்று சட்டத் திருத்தம் வந்தால் 'ஜாதி' சட்டப்படி ஒழிக்கப்பட்டுவிட முடியும்.

நடைமுறையில், ஜாதிக்கு மூலதனமானவற்றை அழித்தால்தான் ஜாதியை மனதிலிருந்தும் விரட்ட முடியும்; ஒழிக்கலாம்!

1. பிரச்சாரம் 50 விழுக்காடு சட்டம் 50 விழுக்காடு என்றால் ஜாதிஒழியும்.

2. ஜாதி மறுப்பு திருமணம் செய்வோருக்கு இடஒதுக்கீடு கல்வி, உத்தியோகத்தில் என்றால் ஜாதிஒழியும்.

■

**கேள்வி:** ஜாதி ஒழிப்புதான் உங்கள் இலக்கு என்கிறீர்கள். அப்படி ஜாதி ஒழிக்கப்பட்டு விட்டால் இடஒதுக்கீடும் போய் விடுமே... உடன்பாடா உங்களுக்கு?

---



**பதில்:** இடஒதுக்கீடே ஜாதி பாகுபாடு ஒழிய வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டதுதான். இடஒதுக்கீட்டை உருவாக்குவதே ஜாதிதான். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் மனு தர்மம் இருக்கிறது. ஆக, **ஜாதி இருப்பதால்தான் இடஒதுக்கீடே தவிர, இடஒதுக்கீட்டிற்காக ஜாதி இல்லை.**

■



எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று தனி மதம்,
தனி ஜாதி, தனி வகுப்பு என்பதாக, பிரிக்கப்பட்ட பின்பு,
அவன் தனது மதம், தனது ஜாதி, தனது வகுப்புக்கு என்று
ஒரு உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ,
அயோக்கியத்தனமோ இருக்கமுடியும்?

வகுப்புவாதம், மதவாதம், ஜாதிவாதம் கூடாது என்கின்ற
யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், ஜாதியையும்,
வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கின்றார்களா?

- தந்தை பெரியார்
(பக்கம் - 7)



9 997772 014483